பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

மரம் : 38 கனி : 5 மே - 2017 சகோ. மோகன் சி. லாசரஸ்

## "...கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?"

எபிரெயர் 13:6.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...



**இ**யேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! சுகமாயிருக்கிறீர்களா? வீட்டில் யாவரும் நலமாயிருக்கிறார்களா? உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்கிறேன்! உங்கள் அன்பிற்காக, ஜெபத்திற்காக கர்த்தரைத் துதிக்கிறேன்!

கடந்த திறப்பின் வாசல் ஜெபத்தில், கர்த்தர் பேசிய வார்த்தைகளை நான் சொல்லக் கேட்டு, எனக்கு அனேக நிந்தைகளும், பயமுறுத்தல்களும் வந்தது. எனக்கு விரோதமாக சுவரொட்டிகளை (Wallposters) எல்லாம் ஒட்டினார்கள். காவல் நிலையத்தில் வழக்கு தொடுத்தார்கள். நம் **'இயேசு விடுவிக்கிறார்'** அலுவலகத்திற்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு மிரட்டினார்கள்.

என்றாலும், என் உள்ளத்தில் ஒரு சின்ன பயம் கூட உண்டாகவில்லை. நான் சோர்ந்து போகவும் இல்லை. காரணம், முதலாவது, அதைப் பேசியது நான் அல்ல! பேசியவர் கர்த்தர்! என்னை எதிர்க்கிறவர்கள், கர்த்தரைத்தான் எதிர்க்கிறார்கள். ஆகவே, எனக்கு பயமில்லை.

இரண்டாவது, உங்கள் ஜெபம்! உலகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகள் எனக்காக ஜெபித்ததை அறிந்தேன். பல தேவ ஊழியர்கள், பல நாடுகளிலுள்ள தேவ பிள்ளைகள் எனக்காக ஜெபித்து, என்னை உற்சாகப்படுத்தினார்கள். அந்த ஜெபத்தின் வல்லமையை என்னால் தினமும் உணர முடிகிறது. அந்த ஜெபம் என்னைப் பாதுகாக்கிறதையும் நான் உணர்கிறேன்.

என்னை நேசிக்க, எனக்காக ஜெபிக்க, உலகமெங்கும் அனேக தேவ பிள்ளைகளையும், தேவ மனிதர்களையும் கர்த்தர் வைத்திருப்பதை அறிந்து, ஆனந்தக் கண்ணீரோடு கர்த்தரைத் துதிக்கிறேன்! இயேசு கிறிஸ்துவை சுமக்கிற இந்தக் கழுதைக்காக இத்தனை பேர் அக்கறை காட்டுவதை நினைத்து, என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து, நன்றி சொல்கிறேன்! **தொடர்ந்து எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.** கர்த்தர் என்னைக் கொண்டு என்ன செய்ய விரும்புகிறாரோ, அதை நான் செய்து முடிக்க, **எனக்காக ஜெபியுங்கள்.**

தமிழ்நாட்டின் எழுப்புதலுக்காக, அடுத்து செய்ய வேண்டிய சில காரியங்களை கர்த்தர் வெளிப்படுத்தி இருக்கிறார். அதைச் செய்து முடிக்க, அவருடைய கிருபை எனக்கு வேண்டும். அதற்காக **ஜெபியுங்கள்!**

**லண்டனில்** நடைபெற்ற உபவாச ஜெபத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். லண்டன் பட்டணத்தில் ஒரு எழுப்புதல் உண்டாகி, ஐரோப்பா நாடுகள் முழுவதும் பரவப் போகிறது! **இங்கிலாந்து தேசத்திற்காக ஜெபியுங்கள்.** ஒரு காலத்தில், இங்கிருந்துதான் அதிகமான மிஷனெரிகள் இந்தியாவிற்கு சுவிசேஷத்தைக் கொண்டு வந்தார்கள். இன்று, இந்த தேசத்திற்கு எழுப்புதல் தேவை!

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக, உலகம் முழுவதும் ஒரு எழுப்புதல் உண்டாகப் போகிறது! அதற்கான அடையாளங்களை எல்லா தேசங்களிலும் காண முடிகிறது. நாமும், நம் **தேசத்தின் எழுப்புதலுக்காக கருத்தாக ஜெபிக்க வேண்டும்.**

ஜூன் மாதத்தில் இலங்கை தேசத்தில் நடைபெறவிருக்கிற ஊழியங்களுக்காக **ஜெபியுங்கள்.** அதற்குரிய விளம்பரங்களை இந்த பத்திரிக்கையில் நீங்கள் காணலாம். **நீங்களும் கலந்து கொள்ளுங்கள்.** அந்த பகுதியிலிருக்கும் உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்தி தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள உற்சாகப்படுத்துங்கள்.

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு பட்டணத்தில்** நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.**

கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

**எனக்காக,** என் **மனைவிக்காக,** நம் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியக் **குடும்பத்திற்காக தினமும் ஜெபியுங்கள்**! நாங்களும் உங்களுக்காக **ஜெபிக்கிறோம்!**

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “...கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?”

எபிரெயர் 13:6.

**நா**ம் வாழ்கிற இந்த உலகம், பொல்லாத இருதயத்தைக் கொண்ட மக்களும், பொறாமை கொண்ட மக்களும் நிறைந்த உலகம்! "நம்மைச் சுற்றிலும் இருக்கிற எல்லோருமே, நம்மை நேசிக்கிறவர்களாக இருப்பார்கள்!" என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. காரணமே இல்லாமல் பகைக்கிறவர்கள், நம்மைச் சுற்றிலும் இருக்கத்தான் செய்வார்கள்.

அப்படிப்பட்டவர்கள், உங்கள் வீட்டிற்குள்ளேயே இருக்கலாம்! உங்கள் தெருவில் இருக்கலாம்! நீங்கள் வேலை செய்கிற இடத்தில் இருக்கலாம்! தொழில் செய்கிற இடத்தில் இருக்கலாம்! உங்கள் ஊழியத்தில் இருக்கலாம்!

நீங்கள் நேசித்த, நீங்கள் உதவி செய்த மக்களே உங்களுக்கு விரோதமாக எழும்பும்போது, உங்கள் மனம் சோர்ந்துதான் போகும்! என்றாலும், இந்தப் பாதையில் நாம் நடந்துதான் ஆக வேண்டும்.

நம்மை உண்மையாக நேசிக்கிற மக்களையும் நாம் சந்திப்போம்! அதே சமயத்தில், காரணமே இல்லாமல் நம்மை விரோதிக்கிற மக்களையும் நாம் சந்திப்போம்! நமக்கு விரோதமாகப் பேசுகிறவர்களை, எழுதுகிறவர்களை, செயல்படுகிறவர்களை நாம் பார்க்கும்போது, நம்முடைய மனது சோர்ந்து போகிறது.

இதையெல்லாம் நாம் எதிர்பார்க்காததினால்தான் சோர்ந்து போகிறோம். ஆனால், இயேசு கிறிஸ்து சொன்னதை நம்முடைய மனதில் பதித்திருந்தால், நாம் சோர்ந்து போக மாட்டோம்.

**“நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.** மத்தேயு **5:10.**

**“என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்;”** மத்தேயு **5:11,12.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்." மத்தேயு 24:9.

"...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்;" யோவான் 16:33.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும்போது, சிலுவையை எடுத்துக் கொண்டுதான் பின்பற்ற வேண்டும். **(மத்தேயு 16:24).** 'சிலுவை' என்பது, பாடுகள், நிந்தைகள், அவமானங்களைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளை நம் மனதில் கொண்டால், நாம் சோர்ந்து போக மாட்டோம்.

"நானும் சாதாரண ஒரு மனிதன்தானே! ஆகவேதான் சோர்ந்து போகிறேன்!" என்று நீங்கள் சொல்லலாம்! எனவேதான், இன்று இந்த தேவ செய்தியின் மூலமாக இயேசு கிறிஸ்து உங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார். உங்களை பலப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் உங்களோடு பேசுகிறார்.

**"...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் (கர்த்தர்) சொல்லியிருக்கிறாரே.**

**அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே."** (எபிரெயர் 13:5,6) என்று, கர்த்தர் இன்று உங்களுக்குச் சொல்கிறார்.

நீங்கள் சொல்ல வேண்டும், **'கர்த்தர் எனக்கு சகாயர்!'** என்று.

**'நான் பயப்படேன்!'** என்று உங்கள் வாயினால் நீங்கள் சொல்ல வேண்டும்.

**'மனுஷன் எனக்கு என்ன செய்வான்?'** என்று சொல்லி, நீங்கள் அறிக்கையிட வேண்டும்.

அப்பொழுது, உங்கள் உள்ளத்தை விட்டு பயம் விலகும்! காரியங்கள் உங்களுக்கு சாதகமாக மாறும்! **நீங்கள் அற்புதங்களைக் காண்பீர்கள்!**

**"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்;..."** (நீதி. 18:21). அதாவது, உங்கள் நாவின் வார்த்தையில் மரணமும் இருக்கிறது, ஜீவனும் இருக்கிறது! அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசினால், மரண வேதனைகளைத்தான் சந்திக்க நேரிடும்! விசுவாச வார்த்தைகளைப் பேசினால், ஜீவனைக் காண்பீர்கள்!

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் பதறிப் போய் தவறான வார்த்தைகளைச் சொல்லி விடாதீர்கள். விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள், நீங்கள் பிரச்சனைகளை மேற்கொள்வீர்கள்!

என்ன பேச வேண்டும்?

# கர்த்தர் எனக்கு சகாயர்!

சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், கர்த்தர் உங்கள் சகாயராக இருக்கிறபடியினால், நீங்கள் அவைகளை மேற்கொள்வீர்கள். ஆகவே, **"கர்த்தர் எனக்கு சகாயர்!"** (THE LORD IS MY HELPER) என்று சொல்லுங்கள். 'சகாயர்!' என்றால், "உதவி செய்கிறவர்!" என்று அர்த்தம்.

உங்களுக்கு உதவி செய்ய கர்த்தர் இருக்கிறபடியினால், திடமனதாயிருங்கள். உங்களுக்கு எந்தக் காரியத்தில் சகாயம் வேண்டும்? அதாவது, எந்தக் காரியத்தில் உங்களுக்கு உதவி வேண்டும்? ஒத்தாசை வேண்டும்?

குடும்பக் காரியத்திலா? வேலைக் காரியத்திலா? தொழில் காரியத்திலா? ஊழியக் காரியத்திலா? பணக் காரியத்திலா? பிள்ளைகள் காரியத்திலா? உங்கள் பிரச்சனைதான் என்ன? உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?

உங்களுக்கு உதவி செய்ய, இயேசு கிறிஸ்து ஆயத்தமாக இருக்கிறார். அவர்தான் உங்களுக்கு சகாயர்! அவர் உங்களை நேசிக்கிறவர்! அவர் உங்களுக்காக சிலுவையில் தன் ஜீவனையே கொடுத்திருக்கிறார்! அவர் உங்கள் பரம தகப்பன்! அவருடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு உதவி செய்ய கர்த்தர் விரும்புகிறார்!

நீங்கள் ஒன்று செய்ய வேண்டும்...

**"எனக்கு ஒத்தாசை வரும் (உதவி வரும்) பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.**

**வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை (உதவி) வரும்."** (சங்கீதம் 121:1,2) என்று **விசுவாசத்தோடு சொல்லுங்கள்.**

"கர்த்தர் எனக்கு சகாயர்! கர்த்தரிடத்திலிருந்து எனக்கு உதவி வரும்!" என்று விசுவாசத்தோடு சொல்லுங்கள். தைரியமாகச் சொல்லுங்கள்! வாய் திறந்து சொல்லுங்கள்! ஜெபத்தில் சொல்லுங்கள்! "என்ன செய்வீர்கள்?" என்று உங்களிடத்தில் விசாரிக்கிறவர்களிடத்தில் சொல்லுங்கள்!

"எப்படி வரும்?' என்று தெரியாது. ஆனால், கர்த்தரிடத்திலிருந்து உதவி வரும்! நான் வெட்கப்பட்டுப் போக மாட்டேன்!" என்று அறிக்கையிடுங்கள், அற்புதங்களைக் காண்பீர்கள்!

தொழில் செய்கிற ஒரு சகோதரரை எனக்குத் தெரியும். திடீரென்று அவருடைய தொழிலில் சரிவு ஏற்பட்டது. கடன் வாங்கி சமாளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் காரியம் சரியாகவில்லை. 'வங்கியில் கடன்!', 'தனி மனிதர்களிடத்தில் கடன்!' என்று, கடன் தொகை பெரிதாகி விட்டது. ஒரு கட்டத்தில், தொழில் முடங்கிப் போய் விட்டது! கடனையும் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஜெபித்தார்!

கடன் கொடுத்தவர்கள் அவரை நெருக்க ஆரம்பித்தார்கள். வங்கி ஒரு பக்கம் அவரை நெருக்க ஆரம்பித்தது. ஒரு வழியும் இல்லாத சூழ்நிலையில், "இருக்கிற சொத்துக்களை எல்லாம் விற்று, கடனை அடைத்து விடலாம்." என்று முடிவெடுத்தார். ஜெபித்தும் பதில் வராததுபோல், எப்பக்கத்திலும் அவருக்கு நெருக்கம்.

எல்லாக் கடனையும் அடைத்து முடிக்க, இருக்கிற சொத்துக்களை எல்லாம் விற்று விட்டால், தொழில் செய்த இடம் போய் விடும்! வீடு போய் விடும்! மொத்தத்தில் எல்லாம் போன பிறகு, அடுத்து எப்படி வாழ்வது? பல போராட்டங்கள்! அடுத்த பக்கம் கர்த்தரை நோக்கி, "உதவி செய்யும்...ஆண்டவரே!" என்று சொல்லி கதறினார். ஆனால், ஒரு பதிலும் வரவில்லை!

"என்ன ஆனாலும் சரி, சொத்துக்களை விற்று கடனை அடைத்து விடலாம்!" என்று எண்ணி, விலை பேச ஆரம்பித்தார். ஆனால் ஜெபத்தை மட்டும் விடவில்லை. கர்த்தரை நோக்கி, உதவிக்காக ஜெபித்துக் கொண்டே இருந்தார்.

சொத்துக்களை எல்லாம் விலை பேசி முடித்து விட்டார்! பணம் கைமாற வேண்டிய நேரம்! ஒருநாள், அமெரிக்கா தேசத்திலிருந்து அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. 'யார்?' என்று விசாரித்தபோது, அந்த சகோதரரோடு கூட படித்த பழைய நண்பர்.

பல வருடங்களுக்குப் பிறகு, அன்போடு நலம் விசாரித்து இருவரும் பேசிக் கொண்டார்கள். அப்பொழுது, "உன் தொழிலில் உண்டான நெருக்கத்தினால், உன் சொத்துக்களை எல்லாம் விற்கப் போவதாக என் நண்பன் மூலமாக அறிந்தேன். அவன் மூலம்தான் உன்னுடைய தொலைபேசி எண் எனக்குக் கிடைத்தது. தேவையான பணத்தை நான் உனக்கு அனுப்பி வைக்கிறேன். உன் சொத்துக்களை விற்க வேண்டாம். நீ தொழில் செய்து, கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தால் போதும்." என்று சொல்லி, தேவையான பணத்தையும் அனுப்பி வைத்தார். அதன் மூலமாக, அந்த சகோதரர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை ஆனார். அந்த அற்புதத்தைப் பற்றி அந்த சகோதரர் என்னிடத்தில் சொல்லி, கர்த்தரைத் துதித்தார்.

பாருங்கள், இக்கட்டான நேரத்தில் இயேசு கிறிஸ்துவிடமிருந்து அந்த சகோதரருக்கு உதவி வந்தது. அவர்தான் நல்ல சகாயர்! உங்களுக்கும் உதவி செய்வார்! **விசுவாசியுங்கள், ஜெபியுங்கள், பெற்றுக் கொள்வீர்கள்!**



**"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்."**
**சங்கீதம் 46:1.**

'அநுகூலமான துணை!' என்றால், 'ஏற்ற நேரத்தில் உதவி செய்கிறவர்!' என்று அர்த்தம். **(A very present help in trouble).**

**கலங்காதீர்கள்! ஏற்ற நேரத்தில் கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு உதவி வரும்! அற்புதத்தைக் காண்பீர்கள்!**

அதனால், **"கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன்!"** என்று தைரியமாக சொல்லுங்கள்.

## நான் பயப்படேன்!

**"கர்த்தர் எனக்கு சகாயராக இருக்கிறபடியினால், நான் பயப்பட மாட்டேன்!"** என்று சொல்லுங்கள்.

பயப்படக் கூடிய காரியங்கள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்கலாம்! உங்களுக்கு இருக்கிற வியாதி உங்களை பயப்படுத்தலாம்! உங்கள் தேவைகள் உங்களுக்குள் பயத்தைக் கொடுக்கலாம்! பொல்லாத மனிதர்கள் உங்களை பயமுறுத்தலாம்! பொல்லாத ஆவிகள் உங்களுக்குள் பயத்தைக் கொண்டு வரலாம்!

நீங்கள் பயப்படுவதற்கு என்ன காரணமாக இருந்தாலும் சரி, அந்த பயத்தை நீங்கள் **மேற்கொள்ள வேண்டும்! பயத்தை ஜெயிக்க வேண்டும்! பயமில்லாத வாழ்க்கை வாழ வேண்டும்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது முடியுமா? பயமில்லாமல் வாழ முடியுமா? ஒன்று மாற்றி ஒன்று, பயப்படுத்துகிற காரியங்கள் நமக்கு வந்து கொண்டிருக்கிறதே!" என்று சொல்கிறீர்களா?

முடியும்! பயமில்லாமல் வாழ முடியும்! கர்த்தர் நம்மோடு கூட இருந்தால், பயமில்லாமல் நம்மால் வாழ முடியும்! நம்மைச் சுற்றி என்ன நடந்தாலும், பயமில்லாமல் நம்மால் முன்னேற முடியும்!

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;..."** (ஏசாயா 41:10) என்று, கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார். நாம் பயந்து பயந்து வாழ்வதை கர்த்தர் விரும்பவில்லை. 'பயப்படாதே!', 'பயப்படாதீர்கள்!' என்கிற வார்த்தைகள், பரிசுத்த வேதாகமத்தில் 365 இடங்களில் எழுதப்பட்டிருப்பதாக, வேத அறிஞர்கள் சொல்கிறார்கள்!

அப்படியானால், வருடத்தின் 365 நாட்களும் 'பயப்படாதே!' என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார். "கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் ஒரு போராட்டம் வந்ததும், பயம் வந்து விடுகிறதே! என்ன செய்வது?" என்கிறீர்களா?

இயேசு கிறிஸ்து உங்களோடு கூட இருந்தால், அவருடைய பிரசன்னம் உங்களைச் சூழ்ந்திருந்தால், பயம் உங்களை மேற்கொள்ளாது. இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரா? என்று உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள்! தினமும் ஜெபித்து, ஜெபித்து, அவருடைய பிரசன்னத்தில் நிறைந்திருங்கள், பயம் தானாக விலகிப் போகும்!

**"இயேசு கிறிஸ்து என்னோடுகூட இருக்கிறார். அவர் என் சகாயர், நான் பயப்பட மாட்டேன்!"** என்று தைரியமாக வாய் திறந்து சொல்லுங்கள்!

சென்னைப் பட்டணத்தில், ஒரு சூதாட்ட கிளப் நடத்திக் கொண்டு, ரௌடியாக ஒரு மனிதர் இருந்தார். ஒரு சமயம், ஒரு இளம் வாலிப மகள் அவருடைய வீட்டிற்குச் சென்று, அவருடைய மனைவிக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தாள். அவர்களும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தக் காரியம், அவருக்குத் தெரிந்து விட்டது. ஒருநாள் அந்த வாலிப மகளும், அவருடைய மனைவியும் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, அவர் வீட்டிற்கு வந்து விட்டார்! "நான் வீட்டில் இல்லாத நேரத்தில், நீ வந்து, என் மனைவியை ஏமாற்றி, அவளை மாற்றி விட்டாய். உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்றார்.

அதற்கு அந்த வாலிப மகள், "நீங்கள் என்னை எதுவும் செய்ய முடியாது. உங்கள் மனைவியை நான் மாற்றவில்லை, இயேசு கிறிஸ்துதான் மாற்றியிருக்கிறார்." என்று தைரியமாகச் சொன்னாள்.

"இந்த ஏரியாவில் என்னைப் பார்த்தால், எல்லோரும் பயப்படுவார்கள்! உனக்குப் பயமே இல்லையா?" என்று கேட்டார்.

"நான் தனியாக வந்தால்தானே பயப்பட வேண்டும்? என்னோடு கூட ஒருவரை அழைத்து வந்திருக்கிறேன். அவர் உங்களை விட பெரியவர்!" என்றாள் தைரியமாக.

"யாரை உன்னோடு கூட அழைத்து வந்திருக்கிறாய்? அந்த ஆளை வெளியே நிறுத்தி இருக்கிறாயா?" என்று கேட்டுக் கொண்டே கதவை எல்லாம் திறந்து பார்த்தார்.

"அவர் வெளியில் இல்லை. என் உள்ளத்திற்குள் இருக்கிறார். அவர்தான் வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து." என்று தைரியமாக சொல்லி விட்டுப் போனாள்.

அவர் அதிர்ந்து போனார். "எல்லோரும் என்னைப் பார்த்தால் பயப்படுவார்கள். இந்தச் சிறு பெண் இவ்வளவு தைரியமாக என்னையே எதிர்த்துப் பேசுகிறாள். இவளுக்குள் ஏதோ ஒரு வல்லமை இருக்கிறது." என்று சொல்லி, கடைசியில் அவரும் கொஞ்ச நாட்களில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, இன்றைக்கு ஊழியம் செய்து கொண்டு இருக்கிறார்.

சாத்தான், நமக்குள்ளே பயத்தைக் கொண்டு வந்துதான் நம்மை மேற்கொள்கிறான். பயத்தை மேற்கொண்டால், நாம் சாத்தானை மேற்கொள்ளலாம்! இயேசு கிறிஸ்து கூட இருந்தால், பயத்தை மேற்கொள்ளலாம்!

சாத்தான், முதலாவது நம்மை பயமுறுத்திப் பார்ப்பான். நம்மை பயப்படுத்தும்படியாக மனிதர்களையும் அவன் பயன்படுத்துவான். நாம் பயந்து விட்டால், தொடர்ந்து நம்மைத் தாக்கி, அழித்து விடுவான்.

ஆகவேதான், **"உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக."** (யோவான் 14:27) என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

மட்டுமல்ல, **"...பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு..."** (மாற்கு 5:36) என்றும் சொல்லியிருக்கிறார்.

பயமும், விசுவாசமும் இணைந்து செல்ல முடியாது. **விசுவாசம் பயத்தை விரட்டும்!** விசுவாசம் கர்த்தரை செயல்பட வைக்கும்! பயம் சாத்தானை செயல்பட வைக்கும்!

ஆகவே, **"விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு (சாத்தானுக்கு) எதிர்த்து நில்லுங்கள்;"** 1 பேதுரு 5:9.

"பயப்பட மாட்டேன்... நான் பயப்பட மாட்டேன்... இயேசு என்னோடு இருப்பதினால்..." என்கிற பாடலை திரும்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பப் பாடுங்கள். "இயேசு கிறிஸ்து என்னோடு இருக்கிறார், நான் பயப்பட மாட்டேன்!" என்று வாய் திறந்து சொல்லுங்கள்!

துன்மார்க்கனும், லஞ்சம் வாங்குகிறவனும், ஊழல் செய்து தேசத்தைக் கொள்ளையடிக்கிறவனும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, அநீதியாக நடத்துகிறவனும் பயமில்லாமல் தேசத்தில் சுற்றித் திரியும்போது, கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிற நாம் ஏன் பயப்பட வேண்டும்?

நம்மோடு கூட இருக்கிற இயேசு கிறிஸ்து பெரியவர்! எல்லா அதிகாரத்தையும் விட, அவருடைய அதிகாரம் மகாப் பெரியது! யார் அவரை ஜெயிக்க முடியும்? அப்படிப்பட்ட சர்வ வல்லவர் நம்மோடு கூட இருக்கிறபடியினால், **'நான் பயப்படேன்!'** என்று தைரியமாகச் சொல்லுங்கள்!

**"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்."** 2 தீமோ. 1:7.

## மனுஷன் எனக்கு என்ன செய்வான்?

"கர்த்தர் எனக்கு சகாயராக இருக்கிறபடியினால், மனுஷனால் எனக்குத் தீங்கு செய்ய முடியாது. மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" என்று தைரியமாகச் சொல்லுங்கள்!

நமக்கு தீங்கு செய்ய நினைக்கிற மக்கள், நமக்கு அருகில்தான் இருப்பார்கள். நாம் வசிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், தொழில் செய்கிற இடத்தில், ஊழியம் செய்கிற இடத்தில் நம்மையே நோக்கிக் கொண்டிருப்பார்கள்!

நமக்கு தீங்கு செய்ய, சமயம் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். சிலர் நம்மிடத்தில் நண்பர்களைப் போலப் பழகிக் கொண்டே, நமக்கு விரோதமாக தீமை செய்ய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்! என்றாலும், கர்த்தர் நமக்கு சகாயராக இருக்கிறபடியினால், அவர்கள் செய்ய நினைக்கிற தீங்கு ஒன்றும் பலிக்காது.

**"...தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?**

**தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்."** ரோமர் 8:31,33.

ஆகவே, **பயப்படாதீர்கள்!** விரோதம் பாராட்டுகிற மக்களைக் குறித்து **கலங்காதீர்கள்.** ஒருவரும் உங்களை ஒன்றும் செய்து விட முடியாது.

சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்த சவுல், **தாவீதை** அழித்து விடும்படி, தன் இராணுவத்தோடு தேடினான். என்றாலும், கர்த்தர் தாவீதை ஒளித்து வைத்துப் பாதுகாத்தபடியினால், தேசத்தின் ராஜாவினால் தாவீதைத் தொட முடியவில்லை.

சவுல் அனுதினமும் தாவீதைத் தேடியும், கர்த்தர் அவரை சவுலின் கையில் ஒப்புக் கொடுக்கவில்லை. **(1 சாமு. 23:14).**

**எலியா** சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே, இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. தேசத்தின் ராஜா தன் இராணுவத்தை அனுப்பி, எலியாவைத் தேடினான். ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கர்த்தர் அவரை மறைத்து வைத்துப் பாதுகாத்தார். **(1 இராஜா. 18:10).**

கர்த்தருடைய அனுமதியில்லாமல், ஒருவரும் நமக்கு விரோதமாக தீங்கு செய்ய முடியாது. ஆகவே, **பயப்படாதீர்கள்.**

மனுஷர் நமக்கு விரோதமாக எழும்பும்போது, அவர்களுடைய பண பலம், அதிகார பலம், செல்வாக்கு இவைகளை எல்லாம் கண்டு **கலங்காதீர்கள்.**

**"மனுஷனுக்குப் பயப்படுகிற பயம் கண்ணியை வருவிக்கும்;..."** நீதி. 29:25.

**"என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்; சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்."** (லூக்கா 12:4) என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருப்பதைக் கவனியுங்கள்.

வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமுள்ள இயேசு கிறிஸ்துவே உங்களோடு கூட இருக்கும்போது, நீங்கள் ஏன் மற்றவர்களுக்காக பயப்பட வேண்டும்? அதிகாரத்தில் உள்ளவர்களாக இருந்தாலும், அவர்களுடைய அதிகாரம் எல்லாம் சில வருடங்கள்தான்! ஆனால், எல்லா அதிகாரத்திற்கும் மேலான அதிகாரமுள்ள சர்வ வல்லமையுள்ள இயேசு கிறிஸ்து நம் பட்சத்தில் இருக்கிறார்!

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பரி. பவுல், கொரிந்து பட்டணத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தபோது, அங்கிருந்த சூழ்நிலைகளைப் பார்த்து, அவருடைய உள்ளத்தில் ஒரு சிறிய பயம் உண்டாயிருக்க வேண்டும்.

அதனால், **"இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே;**

**நான் உன்னுடனேகூட இருக்கிறேன்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்."** அப். 18:9,10.



பாருங்கள், இயேசு கிறிஸ்துவே பவுலுக்கு தரிசனமாகி, அவரை தைரியப்படுத்தினார்! பயம், அவருடைய உள்ளத்தை விட்டு விலகியது! தைரியமாக ஊழியம் செய்தார். ஆக, கர்த்தர் அனுமதித்தால் ஒழிய, ஒருவனும் தேவ பிள்ளைகள் மீது கை போட முடியாது.

ஆகவே, பயப்படாதீர்கள்! திடமனதாயிருந்து, உங்கள் காரியங்களைச் செய்யுங்கள். மனிதர்கள் ஒன்றும் செய்து விட முடியாது. "மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" என்று தைரியமாகச் சொல்லலாம்.

ஒருமுறை, 'ஷாலோம்' ஊழியத்தின் மூலமாக, இராஜஸ்தானில் ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக நாங்கள் சென்றிருந்தபோது, சில மதத் தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களோடு 2 முறை எங்களை கொலை செய்ய துரத்தி வந்தார்கள். மரணத்திற்கும், எங்களுக்கும் ஒரு அடி தூரம்தான் இருந்தது! ஆனாலும், எங்கள் மேல் அவர்களால் கை போட முடியவில்லை, கர்த்தர் அற்புதமாக எங்களை தப்புவித்தார்.

அதேபோல ஒரு சமயம் மத்தியப் பிரதேசத்திலும், ஒரு சமயம் உத்திரப் பிரதேசத்திலும் கூட எங்களை கொலை செய்வதற்குத் திட்டமிட்டு, பதிவிருந்து எங்களைத் தாக்கினார்கள். என்றாலும், எந்தத் தீங்கும் அனுகாமல் கர்த்தர் எங்களைப் பாதுகாத்தார்.

**"கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.**

**கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்."** 2 தீமோ. 4:17,18.

"கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" என்கிற விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்...

பிதாவே, நீர் எனக்கு சகாயராக இருக்கிறபடியினால், உம்மைத் துதிக்கிறேன்!

எனக்கு மனுஷரால் வந்திருக்கிற போராட்டங்களுக்காக, உபத்திரவங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்! எனக்கு வந்திருக்கிற பயமுறுத்தல்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

நீர் எனக்கு சகாயராக இருக்கிறபடியினால், இவைகளுக்கு நான் பயப்படாதிருக்கிற, தைரியமுள்ள இருதயத்தை எனக்குத் தாரும்!

எனக்குள்ளே சாத்தான் கொண்டு வர நினைக்கிற இந்த சிறிய பயமும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என்னை விட்டு விலகட்டும்!

நீர் எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமுள்ள ஆவியைத் தந்திருக்கிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

எனக்கு விரோதமாக செயல்படுகிற மனிதர்களை, நீர் மன்னிப்பீராக! உம் அன்பையும், வல்லமையையும் அவர்கள் அறிந்து கொள்ளச் செய்வீராக!

**"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்;"** (ஏசாயா 54:17) என்று, நீர் தந்திருக்கிற வாக்குத்தத்தத்தை நான் விசுவாசிக்கிறேன்! நீர் எனக்குத் தந்திருக்கிற பணிகளை முழு பெலத்தோடு செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்!


"கர்த்தராகிய நீரே என் சகாயர்! நான் பயப்பட மாட்டேன்! மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" என்று சொல்லி, மகிழ்ச்சியோடு உம்மைத் துதிக்கிறேன்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!

"...எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்.

கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன்.

ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்." (அப். 20:22-24).



## தேவனுடைய திட்டம் நிறைவேறுகிறது...

# தேவனுடைய கூடாரம்!




"தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்கும்படியாக, தேவனுடைய கூடாரத்தைக் கட்டி, என் திட்டங்களை நிறைவேற்று." என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

ஆனால் என் உள்ளத்திற்குள் நான் தயங்கிக் கொண்டிருந்த சமயத்தில், 7½ ஏக்கர் நிலத்தை கர்த்தர் இலவசமாகவே நம் ஊழியத்திற்குக் கொடுத்து, "நான் உனக்குச் சொன்ன தேவ திட்டத்தை நிறைவேற்று. இது, மாதத்தில் ஒருநாள் கூட்டம் நடத்துவதற்காக அல்ல. இது, ஒரு எழுப்புதல் ஜெப மையமாக இருக்கும். எழுப்புதல் காலத்தில், இங்கு தினந்தோறும் ஊழியங்கள் நடைபெறும்!" என்று கர்த்தர் திருவுளம் பற்றினார்.

மட்டுமல்ல, "இதன் தேவைக்கு நீ எங்கும் போக வேண்டாம். யாரிடத்திலும் கேட்கவும் வேண்டாம். பத்திரிக்கையில் மட்டும் தெரியப்படுத்து. இதன் தேவைகளை நான் சந்திப்பேன்." என்று வாக்குக் கொடுத்தார்.

அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து, இதுவரை நான் யாரிடத்திலும் தேவனுடைய கூடாரத்திற்காகக் காணிக்கை கேட்டதில்லை. கர்த்தர்தான், தன்னால் ஏவப்படுகிற தேவ பிள்ளைகள் மூலமாக இதைக் கட்டி வருகிறார்.

இதற்காகக் கொடுத்துத் தாங்குகிறவர்களை கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார். அனேகர் சாட்சிக் கடிதங்களையும் அனுப்பி வருகிறார்கள்.

இதுவரை, 75 சதவிகித வேலைகள் முடிந்து விட்டன. இன்னும் முடிக்கப்பட வேண்டிய வேலைகள், துரிதமாக முடிக்கப்பட ஜெபியுங்கள். கட்டுமானப் பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இங்கு வாரந்தோறும் முதியோர்களுக்கான, **'சிமியோன் ஜெபம்!'**, விதவைகளுக்கான, **'அன்னாள் ஜெபம்!'** மற்றும் **'அற்புத விடுதலைப் பிரார்த்தனை!'**, மாதந்தோறும் **'திறப்பின் வாசல் ஜெபம்!'**, **'முழு இரவு ஜெபம்!'**, **'மூத்த குடிமக்கள் மற்றும் விதவைகளுக்கான 'சிறப்புக் கூடுகை!'**, **'மாற்றுத் திறனாளிகள் கூட்டம்!'**, **'வாலிபர் ஜெபம்!'** (Synergia!), **'சிறுவர் ஜெபம்!'** மற்றும் **'சுவிசேஷகர்கள் ஐக்கியக் கூடுகை!'**, தினந்தோறும் இந்தியாவிற்காக ஜெபிக்கிற, **'ஜாமக்காரன் ஜெபம்!'**, **'அறுவடை வேதாகமக் கல்லூரி'** போன்ற ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேலும், இங்கு **செயல்பட்டுக் கொண்டிருக்கிற வரவேற்பறைக்கு** (Reception) தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் நேரடியாக வந்து ஜெபித்து, தேவ ஆலோசனைகளையும், அற்புதங்களையும் பெற்றுச் செல்கிறார்கள்.

தேவனுடைய இந்த எழுப்புதல் திட்டத்தில், கர்த்தர் ஏவுகிறபடியே கொடுத்துத் தாங்கலாம்.

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

- உங்கள் சகோதரன்.

**காணிக்கை அனுப்ப...**

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo - 02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

'www.jesusredeems.com/donation.php'

என்கிற எமது **இணைய தளத்தின் மூலமாகவும்** நீங்கள் காணிக்கை செலுத்தலாம். - உங்கள் சகோதரன்.

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA.**

*(Ph: 011 293 0152, 071 437 1111)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவும், நானும்!



**இந்தப் பகுதியில், என்னுடைய 40 ஆண்டு கால ஊழியப் பாதையிலும், என் தனிப்பட்ட வாழ்க்கையிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னோடு கூட இருந்து நடத்தி வருகிற காரியங்களை, 'இயேசுவும், நானும்!' என்கிற தலைப்பில் வெளியிட்டு வருகிறேன். இது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறேன்.**

கடந்த (2017) ஏப்ரல் மாத இதழில், "டாக்டர்களால் நீங்கள் கைவிடப்பட்ட அந்தச் சூழ்நிலையில், உங்கள் மன நிலை எப்படியிருந்தது?' என்ற கேள்விக்கு நான் பதிலளிக்கும்போது, 'அந்த சகோதரர் ஜெபம் பண்ணி முடித்த பிறகு, நான் தானாகவே எழுந்து கட்டிலில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தபோது, எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! அதன் பிறகு, மெதுவாகக் கைகளை ஊன்றி என்னால் நிற்க முடிந்தது! சில அடி தூரங்கள் என்னால் நடக்க முடிந்தது! கர்த்தருடைய தொடுதல், என்னை சுகமாக்கி விட்டது!" என்பதாக வாசித்து முடித்திருப்பீர்கள்.

## இதோ, அதன் தொடர்ச்சி...

**இது, உங்களுக்கு நடந்த பெரிய ஒரு அற்புதம்! அதுவரை இயேசு கிறிஸ்துவை ஒரு கடவுளாகப் பார்க்காமல், நல்ல ஒரு மனிதனாக மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த நீங்கள், "அவர்தான் எனக்கு இந்த அற்புதத்தைச் செய்தார்!" என்று எப்படி நிச்சயித்துக் கொண்டீர்கள்?**

அதற்கு முன்பாக, நாங்கள் பல தெய்வங்களை வேண்டிப் பார்த்தோம். அவைகளிடத்திலிருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை. ஆனால் சகோதரர் சாமுவேல் அவர்கள், இயேசு கிறிஸ்துவின் பெயரை உச்சரித்து, அவரை நோக்கி எனக்காக ஜெபித்துக் கொண்டிருந்த சமயத்தில், நான் இருந்த அந்த அறைக்குள் தேவப் பிரசன்னம் இறங்கியதையும், அவருடைய வல்லமையின் தொடுதலையும் நன்கு உணர்ந்தேன்.

அவருடைய அந்த ஜெபத்திற்கு உடனே பதில் வந்தபடியினால், "இயேசு கிறிஸ்துதான் இந்த அறைக்குள் வந்து, என்னைத் தொட்டார்." என்று, என்னால் நிச்சயமாகவே உணர முடிந்தது. என் இருதயம் சரியாகி விட்டதை அறிந்து கொண்டேன். அதற்குப் பிறகு, என் பெற்றோர் என்னை எந்த டாக்டரிடத்திலும் கொண்டு போகவே இல்லை. வீங்கிப் போயிருந்த என் இருதயம், வீக்கமெல்லாம் மாறி, Normal ஆகி விட்டது. ஆக, முழுவதுமாகச் செயலிழந்து போயிருந்த என் இருதயம், ஒரு புது இருதயமாக மாறி விட்டது!

**மரணப் படுக்கையில் இருந்த உங்களுக்கு சுகத்தைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவைக் குறித்து, உங்கள் மனதுக்குள் என்ன நினைத்தீர்கள்? அதன் பிறகு, இதுவரைக்கும் உங்கள் இருதயத்தில் ஏதாவது பெலவீனம் ஏற்பட்டதா?**

அந்த சம்பவத்தைப் பற்றி நான் யோசிக்கும்போது, "கர்த்தருடைய அன்பும், இரக்கமும் எவ்வளவு பெரியது!" என்பதை நினைத்து நினைத்து, அவருக்கு நன்றி சொல்கிறேன். இப்பொழுதும் கூட சில வேளைகளில் நான் அவரைப் பார்த்து, "ஆண்டவரே, நான் உம்மை நம்பவில்லையே! பிறகு ஏன் என்னை சுகமாக்கினீர்?" என்று கேள்வி கேட்பேன்.

நான் மரணப் படுக்கையில் இருந்த போதுகூட, "இயேசுவே, என்னை மன்னித்து, சுகமாக்கும்..." என்று கேட்கவில்லை. ஆனாலும், அவரே என்னை தேடி வந்து, எனக்கு அற்புதம் செய்தாரே! **இயேசு கிறிஸ்துவினுடைய அந்த அன்பு, விளங்கி கொள்ள முடியாத ஒரு அன்பு!**

ஒரு தாய்-தகப்பனுடைய அன்பைக் காட்டிலும், ஒரு சினேகிதனுடைய அன்பைக் காட்டிலும், அவருடைய அன்பு மகாப் பெரியது! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, தாங்கள் பெற்றெடுத்ததினால் நேசிப்பார்கள்! ஒரு சகோதரனோ, ஒரு சகோதரியோ, தன்னுடன் பிறந்த காரணத்திற்காக, இரத்தப் பாசத்தின் நிமித்தமாக ஒருவரை ஒருவர் நேசிப்பார்கள்.

ஆனால் நேசிக்காமல் வெறுத்து, மிகக் கேவலமாகப் பேசிய ஒரு சாதாரண மனிதனை, இயேசு கிறிஸ்து தேடி வந்து அன்பு காண்பித்தால், அவருடைய அந்த அன்பைப் பற்றி என்ன சொல்வது? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை என்னால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை! என் மீது அவர் வைத்திருக்கிற அன்பை, கிருபையை நினைத்தால், இன்றைக்கும் என் கண்களில் கண்ணீர் வரும்!

நான் அவரைப் பரியாசமாக, கேவலமாகப் பேசியதற்குப் பதிலாக, அவர் என்னை பழி வாங்கி இருக்கலாம்! ஆனால், இயேசு கிறிஸ்து பழி வாங்குகிற ஒரு தெய்வமும் அல்ல. தன் சத்துருவையும் நேசிக்கிற ஒரு தெய்வம் என்பதை, என்னுடைய வாழ்க்கையிலும் அவர் நிரூபித்துக் காண்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும், எங்கள் வீட்டில் எல்லோரும் இந்துக்கள். எங்கள் வீட்டிற்குள் அனேக விக்கிரகப் படங்களைத்தான் வைத்திருந்தோம். அந்த அறைக்குள்தான் இயேசு கிறிஸ்து என்னை குணமாக்குவதற்காகக் கடந்து வந்தார். "இவர்கள் எல்லோரும் இந்துக்கள்! இவர்களுக்கும், எனக்கும் என்ன சம்மந்தம்? நான் இவர்களுடைய வீட்டிற்குள் ஏன் போக வேண்டும்?" என்று இயேசு கிறிஸ்து நினைக்கவில்லை.

எனக்கு விசுவாசம் இல்லை. ஆனால், என் தாயாருடைய சின்ன விசுவாசத்தை அவர் கனப்படுத்தி, அவர்களுடைய கண்ணீரைக் கண்டு மனமிரங்கி வந்தார். அவர் என்னைத் தொட்டு, எனக்கு அற்புதம் செய்தவுடன், என் இருதயம் புது இருதயமாகி விட்டது! என்னுடைய செயலிழந்து போயிருந்த வலது காலுக்கும், இடது காலுக்கும் எந்தவொரு சின்ன வித்தியாசமும் இல்லை. ஒரு பரிபூரண சுகத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்தார்! இந்நாள் வரையிலும், நல்ல சுகத்தோடு கர்த்தர் என்னை வைத்திருக்கிறார். கர்த்தர் எனக்கு அற்புதம் செய்து, இப்பொழுது 45 வருடங்கள் கடந்து விட்டன. இன்றைக்கும் அவருடைய அந்த அன்பை நினைக்கும்போது, ஆனந்தக் கண்ணீரோடு கர்த்தரைத் துதிக்கிறேன்.

சில வருடங்களுக்கு முன்பு, ஒருமுறை நான் ஊழியத்தின் நிமித்தமாக ஆஸ்திரேலியா தேசத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு தொடர்ந்து பிரசங்கம் செய்தபடியினால், என் தொண்டை பாதிக்கப்பட்டு விட்டது. அங்குள்ள ஒரு டாக்டரிடத்தில் காண்பித்தபோது, "உங்களுக்கு வேறு ஏதாவது சிகிச்சை எடுக்க வேண்டுமா?" என்று கேட்டார். அதற்கு நான், "எனக்கு இப்பொழுது தொண்டைதான் கட்டியிருக்கிறது. அதற்கு ஏதாவது மாத்திரை கொடுங்கள்." என்று கேட்டேன். ஆனால் அவர், என் இருதயத்தை பரிசோதனை செய்தார்.

உடனே நான் அவரிடத்தில், "என் தொண்டையில்தானே பிரச்சனை? அதற்குப் பதிலாக என் இருதயத்தை ஏன் பரிசோதனை செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "மருத்துவ ரீதியாக தொண்டைக்கும், இருதயத்திற்கும் சம்மந்தம் இருக்கிறது." என்று சொன்னார். அது வரை அந்த டாக்டருக்கு, என்னுடைய சாட்சியைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்களை நான் முதன் முதலாக அன்றைக்குத்தான் சந்தித்திருக்கிறேன். அப்பொழுது அந்த டாக்டர், "உங்கள் இருதயத்தில் ஏதோவொரு பிரச்சனை இருப்பதைப் போலத் தெரிகிறதே!" என்று சொன்னார்.



உடனே நான், "என்னுடைய 14வது வயதில் நான் வியாதிப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்தபோது, இயேசு கிறிஸ்து எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்!" என்று சொன்னேன். உடனே அவர், "அப்படியா!" என்று ஆச்சரியப்பட்டுச் சொல்லி விட்டு, "எதற்கும் இருதய சிறப்பு மருத்துவர் ஒருவர் இருக்கிறார். அவரைப் போய் பார்க்க நான் அனுமதி வாங்குகிறேன். நாளை காலையில் அவரைப் போய் பார்த்து விட்டு வருவோமா?" என்று கேட்டார்.

எனக்குள் ஒரு பெரிய போராட்டம்! 'என்ன?' என்றால், "நான் உலகமெல்லாம் போய், 'இயேசு எனக்கு புது இருதயம் தந்திருக்கிறார்!' என்பதாக சாட்சியாகச் சொல்லி வருகிறேன். 'இப்பொழுது, அந்த இருதயத்தில் பிரச்சனை இருக்கிறது!' என்றால், நான் சொன்ன சாட்சி பொய்யானதா?" என்கிற ஒரு கேள்வி எனக்குள் எழும்ப ஆரம்பித்தது.

ஆனாலும், 'சரி.' என்று அவர்களிடத்தில் சொல்லி விட்டேன். பிறகு நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து, அன்று இரவு அதிக நேரம் தேவ சமூகத்தில் அமர்ந்து, "ஆண்டவரே, நீர் என்னை அன்றைக்கே சுகமாக்கி விட்டீர்! எனக்கு புது இருதயத்தைத் தந்து விட்டீர்! இந்நாள் வரைக்கும் என் இருதயத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லை.

ஆனால், நாளை இருதய சிறப்பு மருத்துவர் என்னைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "உங்கள் இருதயத்தில் இப்படி எல்லாம் இருக்கிறது!" என்று ஏதாவது சொன்னால், நான் சொன்ன சாட்சிதானே பொய்யாக இருக்கும்? நீர் எனக்கு புது இருதயத்தைத் தந்திருக்கிறீர் என்றுதானே எல்லோரிடத்திலும் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்." என்று சொல்லி ஜெபித்தேன்.

அதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, 'நானே உன் பரிகாரியாகிய கர்த்தராக இருக்கிறேன்! ஆனாலும், நாளைக்கு நீ 'அந்த டாக்டரைப் போய் பார்க்க வேண்டாம்." என்று இருந்து விடாதே. நீ போ. நான் உனக்கு சுகம் கொடுத்ததை நிரூபிப்பேன்." என்று என்னோடு பேசினார். அவரிடத்திலிருந்து இந்த பதில் வருகிற வரைக்கும் நான் ஜெபித்தேன். அவர் என்னோடு பேசி முடித்தவுடன், மிகுந்த சந்தோஷத்தோடு கூட, "நீர் என்னை சுகமாக்குகிற தேவனாகிய கர்த்தர்!" என்று சொல்லி அவரைத் துதித்தேன்.

## இந்த சம்பவம் எப்பொழுது நடந்தது?

7 வருடங்களுக்கு முன்புதான் நடந்தது. அதன் பிறகு, அந்த டாக்டரிடத்தில் போனோம். பல நிமிட நேரங்கள் அந்த டாக்டர் எனக்கு எல்லா விதமான பரிசோதனையையும் செய்து பார்த்தார். பரிசோதனை எல்லாம் முடிந்து, அந்த டாக்டருடைய அறையில் வந்து அமர்ந்தேன். அப்பொழுது அவர் என்னிடத்தில், "உங்கள் இருதயத்தில் ஒரு சின்னப் பிரச்சனை கூட இல்லையே! என்ன காரியம்?" என்று கேட்டார். அப்பொழுதுதான் நான் அவரிடத்தில், "என்னுடைய 14வது வயதில் என் இருதயம் வீங்கி, என் வலது கால் செயலிழந்து போய் விட்டது.

எனக்காக ஜெபித்தபோது, இயேசு கிறிஸ்து எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்." என்று என்னுடைய சாட்சியைச் சொன்னேன்.

- தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மரில் இறங்கிய இயேசுவின் வெளிச்சம்!

'பர்மா' என்று அழைக்கப்பட்ட இந்த தேசம், தற்பொழுது 'மியான்மர்' என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு புத்த தேசம். இங்கு சுமார் 6 கோடி மக்கள் வசிக்கிறார்கள். சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக, இராணுவ ஆட்சியின் கீழிருந்த மக்கள், தற்பொழுதுதான் சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறார்கள். செழிப்பான ஒரு தேசமாக இருந்தாலும், பெரும்பாலான மக்கள் வறுமையில்தான் வாழ்கிறார்கள்.

2 வருடங்களுக்கு முன்பு, "உன் ஜனங்கள் அதிகமாக வசிக்கிற ஒரு தேசத்திற்கு உன்னைக் கொண்டு செல்வேன். உன் மூலமாக அந்த ஜனங்களுக்கு என் சுவிசேஷத்தின் வல்லமையை விளங்கப் பண்ணுவேன்." என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

"அது எந்த தேசம்?" என்று கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, 'மியான்மர்' என்று திட்டமாகச் சொன்னார். உடனே இந்த தேசத்தைக் குறித்த எல்லா விபரங்களையும் சேகரித்து, ஜெபிக்க ஆரம்பித்தோம். அப்பொழுதுதான், "கர்த்தர் இந்த தேசத்தை எவ்வளவாய் நேசிக்கிறார்!" என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.



1813-1850ம் வருடங்களிலேயே, **'அதோணிராம் ஜட்சன்'** என்கிற ஒரு அமெரிக்கன் பாப்டிஸ்ட் மிஷனெரியை கர்த்தர் இந்த தேசத்திற்கு அனுப்பி, சுவிசேஷத்தை விதைக்கச் செய்தார். மிகுந்த பாடுகளுக்கு மத்தியில் ஊழியம் செய்த அவர், பர்மிய மொழியில் பரிசுத்த வேதாகமத்தை மொழி பெயர்த்துள்ளார்.

அவர் செய்த ஊழியங்களின் விளைவாக, இன்றைக்கு சுமார் 5,000க்கும் அதிகமான பாப்டிஸ்ட் திருச்சபைகள் எழும்பி இருக்கின்றன! மேலும், ஏராளமான கத்தோலிக்க மிஷனெரிகளும் இந்த தேசத்தில் வந்து ஊழியம் செய்திருக்கிறார்கள். இவைகளின் விளைவாக, பல்வேறு சபைப் பிரிவுகளைச் சார்ந்த, சுமார் 15,000க்கும் அதிகமான திருச்சபைகள் எழுப்பப்பட்டு இருக்கிறது. ஆனால், திருச்சபைகளில் எழுப்புதலைப் பார்க்க முடியவில்லை.

இந்த தேசத்தில், சுமார் 40 லட்சத்திற்கும் அதிகமான இந்திய மக்கள் வசிக்கிறார்கள். யாங்கூன் (ரங்கூன்) மாநிலத்தில் மட்டும், சுமார் 5 லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர், மிகுந்த வறுமைக்கு மத்தியில், கூலி வேலை செய்துதான் பிழைக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க, கடந்த (2017) மார்ச் மாதம் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியக் குழுவினராகக் கடந்து சென்றோம். 16ம் தேதி, திருச்சபை மேய்ப்பர்களுக்கென்று ஒரு **சிறப்புக் கூட்டம்** ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் 188 பேர் கலந்து கொண்டார்கள். நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள்,



திருச்சபை மேய்ப்பர்களுக்கான சிறப்புக் கூடுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தேசத்தைப் பற்றி கர்த்தர் வெளிப்படுத்தி இருந்த காரியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, சபை வளர்ச்சிக்கான தேவ ஆலோசனைகளைக் கொடுத்தபோது, அனைத்து மேய்ப்பர்களுடைய ஆவிக்குரிய கண்களும் திறக்கப்பட்டு, புதிய தரிசனத்தையும், ஜெப ஆவியையும் பெற்றுக் கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, 17, 18, 19 தேதிகளில், யாங்கூன் பாப்டிஸ்ட் திருச்சபையின் **Franc** ஆடிட்டோரியத்தில் ஒழுங்கு செய்திருந்த **விடுதலைப் பெருவிழாவை** கர்த்தர் ஆசீர்வதித்தார். ஒவ்வொரு நாள் கூட்டத்தையும் பல்வேறு திருச்சபைகளைச் சார்ந்த தலைவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தார்கள். முதல் நாள் கூட்டத்திற்கு, சுமார் 1,800 பேர் கடந்து வந்திருந்தார்கள். கடைசி நாளில், சுமார் 3,000 பேர் சுவிசேஷத்தை கேட்கக் கூடி வந்திருந்தார்கள்.

பாடல் வேளை


சகோ. ஜாண் பன்னீர் செல்வம்


எழுப்புதலுக்காக ஜெபிக்கும் தேவ ஊழியர்கள்


பாடல் குழுவினர்

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்களும், சகோ. A. **அப்பாத்துரை** அவர்களும் வழங்கிய தேவ செய்திகளின் மூலமாக ஜனங்களின் உள்ளம் உடைக்கப்பட்டது. "இந்தக் கூட்டத்தில் நாங்கள் பார்த்த ஒரு அதிசயம் என்ன?" என்றால், "கண்ணீர் வடியாத முகங்களே இல்லை!" என்று சொல்லக் கூடிய அளவுக்கு, அத்தனை பேருடைய உள்ளத்தையும் ஆவியானவர் உடைத்து, அவர்களுடைய பாவ, சாப, வியாதிகளின் கட்டுகளிலிருந்து அவர்களுக்கு விடுதலையைக் கொடுத்தார்.



கடைசி நாள் கூட்டத்திற்காக, நமது சகோதரர் அவர்கள் ஜெபித்து ஆயத்தப்பட்டபோது, "இயேசுவே, தொடர்ந்து நான் இந்த தேசத்திற்கு வந்து ஊழியத்தை நிறைவேற்ற உமக்குச் சித்தமானால், எனக்கு ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும்.

இதுவரை நடைபெற்ற எந்தக் கூட்டங்களிலும் செய்திராத பலத்த கிரியைகளை நீர் செய்ய வேண்டும்." என்று பாரத்தோடு ஜெபித்தபோது, "நீ போ. அப்படியே நான் செய்வேன்!" என்று ஆவியானவர் வாக்குக் கொடுத்து அனுப்பினார்.

அன்றைய தினம் செய்தி வேளைக்கு முன்பாகவே, நமது சகோதரர் அவர்களை சுமார் ஒரு மணி நேரம் ஜனங்களுடைய விடுதலைக்காக கர்த்தர் ஜெபிக்க வைத்து, தான் சொன்னபடியே ஜனங்கள் மத்தியில் பலத்த அற்புதங்களைச் செய்தார். செய்தி வேளைக்குப் பிறகும் ஏராளமான ஜனங்களை கர்த்தர் விடுதலையாக்கினார். அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்திலேயே அசுத்த ஆவிகள் அலறி ஓடின



கண்ணீரோடு கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள்



சனிக்கிழமை பகல் நேரத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்திலும், அனேகர் கலந்து கொண்டு, ஜெப ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். சுமார் 230 பேர் தேசத்திற்காக தினமும் திறப்பிலே நின்று ஜெபிக்க, தங்களை அர்ப்பணித்து இருக்கிறார்கள்.



சகோ.
S. சாம் ஜெபராஜ்

உபவாச ஜெபத்தில் கலந்து கொண்ட தேவ பிள்ளைகள்







தேவ செய்திகளை மொழி பெயர்த்த
Rev. அலெக்ஸ், சகோதரி ரோஸ்லின்

தலைமை தாங்கி சிறப்பித்த தேவ ஊழியர்கள்



Bishop Rev.
Dr. Zothan Mawia



Rev.
Kyaw Myo Naing



Captain
Win Maung Oo

இந்தக் கூட்டங்களின் மூலமாக, இருளிலிருந்த ஜனங்கள் மெய்யாகவே பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மட்டுமல்ல, 'மியான்மர் தேசம் மறுரூபமாகும்!' என்று ஆவியானவர் திருவுளம் பற்றியிருக்கிறார். அதற்காக தொடர்ந்து **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**



சகோ. **ஜீவானந்தம்**



பாஸ்டர்
பால்சன் காலேப்

இந்தக் கூட்டங்களுக்கான சகல ஏற்பாடுகளையும், சகோ. **ஜீவானந்தம்** மற்றும் பாஸ்டர் **பால்சன் காலேப்** ஆகியோர் தலைமையிலான **Indo-Myanmar Prayer Fellowship** குழுவினர் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

இந்த ஊழியத்திற்கான சகல தேவைகளையும் நமது **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியம் பொறுப்பெடுத்துக் கொண்டது.

இவ்வூழியத்திற்காக உங்களில் அனேகர் ஜெபித்தீர்கள், கொடுத்தீர்கள், பிரயாசப்பட்டீர்கள். உங்கள் பிரயாசத்திற்கேற்ற பலனை, நிச்சயம் கர்த்தராகிய தேவன், உங்கள் வாழ்க்கையில் கட்டளையிடுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

மியான்மர் தேசத்திற்காகவும், அந்த தேசத்தில் நாம் தொடர்ந்து செய்ய இருக்கிற ஊழியங்களுக்காகவும் **ஜெபித்துக் கொள்ளுங்கள்.** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! - கூட்ட ஒருங்கிணைப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெத்செமனே
ஜெப மையம்

**GETHSEMANE**
PRAYER CENTRE

முகவரி: **இல. 31, உதயநகர் கிழக்கு,**
**நாகதம்பிரான் கோவில் வீதி,**
**கிளிநொச்சி.**
**Ph: 021 - 2285 284.**

**அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.**

## இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!**
(புதன்கிழமைதோறும்)
12:00 P.M. - 3:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
9:00 A.M. - 12:00 Noon

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்!
(ஞாயிற்றுக்கிழமைதோறும்)
3:00 P.M. - 4:00 P.M.

**அற்புத விடுதலை பிரார்த்தனை!**
(ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை)
5:00 P.M. - 7:00 P.M.

**முழு இரவு ஜெபம்**
(போயா நாளின் முந்தைய தினம்)
இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

# காணிக்கை அனுப்புவோர்
## கவனத்திற்கு...



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு!**

நீங்கள் காணிக்கை அனுப்பிய பின்னர் நீங்கள் செலுத்தியதற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைபேசியின் மூலமாக தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.

**A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680**
**Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo -02. Swift Code : HBLILKLXXXX.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயம் பெற்றவர்கள்!



'ஜெயம் பெற்றவர்கள்!' என்கிற இந்தப் பகுதியின் மூலமாக, அனேகர் ஆசீர்வதிக்கப்படுவதை அறிந்து, கர்த்தரைத் துதிக்கிறேன். ஒருவேளை இன்றைக்கு, உங்கள் எதிர்கால வாழ்க்கையைக் குறித்த ஒரு கேள்விக் குறியோடு நீங்கள் இருக்கலாம்! பயப்படாதீர்கள்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களோடு கூட இருக்கிறார்!



நீங்கள் ஒரு இடத்தில் வேலை செய்து கொண்டிருக்கலாம்! அல்லது தொழில் செய்து கொண்டிருக்கலாம்! அல்லது படித்துக் கொண்டிருக்கலாம்! நீங்கள் எந்த நிலைமையில் இருந்தாலும், உங்கள் காரியத்தில் ஜெயம் கொடுக்கவே கர்த்தர் விருப்பம் உள்ளவராக இருக்கிறார்.

ஒரு சிறிய, சாதாரண 'டீ 'கடையை ஆரம்பித்து, இன்றைக்கு பெங்களூரு பட்டணம் முழுவதும் மிகப் பிரபலமாகப் பேசப்படக் கூடிய அளவிற்கு, ஒரு சகோதரருடைய தொழிலை கர்த்தர் எப்படி ஆசீர்வதித்து உயர்த்தினார்? என்பதைப் பற்றிய ஒரு அனுபவ சாட்சியை இங்கே தருகிறோம். வாசித்து, நீங்களும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். - உங்கள் சகோதரன்.

## வாக்குக் கொடுத்தவர், வாக்கை நிறைவேற்றினார்!

பெங்களூருவிலிருந்து... சகோ. டேனியல், 'சாரோன் டீ ஸ்டால்'.

கிறிஸ்தவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. அப்படிப்பட்ட வைராக்கியமான ஒரு 'இந்து'வாக நான் இருந்தேன். என் நண்பன் ஒருவன், ஞாயிறுதோறும் ஆலயத்திற்குச் செல்கிற பழக்கம் உடையவனாக இருந்தான். ஒருநாள் அவனை ஆலயத்தில் கொண்டு போய் விடுவதற்காக, காரில் அழைத்துக் கொண்டு போனேன். அங்கு போய் சேர்ந்தபோது, "நான் ஆலய ஆராதனைக்குப் போய் விட்டு வருகிறேன். அது வரைக்கும் நீ இங்கேயே இரு." என்று, அவன் என்னிடத்தில் சொல்லி விட்டுப் போய் விட்டான். அன்றைக்கு அந்த ஆலயத்தில் பாடப்பட்ட பாடல்களையும், தேவ செய்தியையும் நான் கேட்டபோது, எனக்குள் ஒரு மாற்றம் உண்டானது.

அப்பொழுது நான், "இப்படிப்பட்ட நல்ல ஆலோசனைகளைக் கொடுக்க நமக்கு யாரும் இல்லையே! ஏன் நாம் உள்ளே போய் உட்கார்ந்து, இந்த ஆலோசனைகளை எல்லாம் கேட்கக் கூடாது?" என்று எண்ணி, அந்த ஆலயத்திற்குள் போய் பார்த்தபோது, அங்கே எல்லோரும் முழங்கால்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்றைய சூழ்நிலையில், எனக்கு நிலையான ஒரு வேலை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். உடனே நான், "ஆண்டவரே, நீர் உண்மையான தெய்வமானால், எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்க உதவி செய்யுங்கள்." என்று சொல்லி ஜெபித்து விட்டுப் போய் விட்டேன். அந்த வாரத்திலேயே, கர்த்தர் எனக்கு ஒரு பெரிய கம்பெனியில் டிரைவர் வேலை கிடைக்க உதவி செய்தார்.



அந்தக் கம்பெனியில், ஆரம்ப நாட்களில் ஞாயிற்றுக் கிழமைதோறும் ஆலயத்திற்குச் செல்வதற்காக எனக்கு விடுமுறை கொடுத்தார்கள். அதன் பிறகு, 6 மாதங்களாக எனக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை கொடுக்கவில்லை. அதன் நிமித்தமாக, ஆராதனைக்குப் போக முடியாத சூழ்நிலை எனக்கு உண்டானதினால், மிகவும் சோர்ந்து போனேன்.

அப்பொழுது, "ஆலயம் முக்கியமா? வேலை முக்கியமா?" என்கிற கேள்வி எனக்குள் எழுந்தது. கடைசியில், "ஆலயம்தான் முக்கியம்! இந்த வேலை போனால் என்ன? கர்த்தர் இதை விட நல்ல ஒரு வேலையை எனக்குக் கொடுப்பார்!" என்று, அந்த வேலையை விட்டு விடத் தீர்மானித்தேன்.

அந்தக் கம்பெனியின் நிர்வாக இயக்குனர் என்னிடத்தில், "நீ நன்றாக வேலை செய்கிறாய்! உன்னைப் போல ஒரு பயபக்தி உள்ள, உண்மையுள்ள ஒரு ஆள் கிடைப்பது கஷ்டம்! உன்னை விட்டு விட எனக்கு விருப்பம் இல்லை. வேண்டுமானால், வெள்ளிக்கிழமை விடுமுறை எடுத்துக் கொள். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை எடுக்காதே. உனக்கு கடன் பிரச்சனை இருந்தால் சொல். நான் பணம் தருகிறேன்." என்று சொன்னார்.

அதற்கு நான், "எனக்குக் கடன் பிரச்சனை எதுவும் இல்லை. ஞாயிற்றுக் கிழமைதான் எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு நாள். நாங்கள் குடும்பமாக ஆலயத்திற்குப் போவோம். அன்றைக்குத்தான் எனக்கு விடுமுறை வேண்டும். அதுதான் எனக்கு முக்கியம்." என்று சொன்னேன். அதற்கு அவர், "ஞாயிற்றுக் கிழமை விடுமுறை கொடுக்க முடியாது." என்று சொல்லி விட்டார். ஆகவே நான் அந்த வேலையை விட்டு வந்து விட்டேன். எல்லோரும், "கிடைத்த ஒரு நல்ல வேலையை இப்படி விட்டு விட்டுப் போகிறீர்களே!" என்று சொன்னார்கள். எனக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. நான் அவர்களிடத்தில், "கர்த்தர் எனக்கு மேய்ப்பராக இருக்கிறார். நான் தாழ்ச்சி அடைய மாட்டேன்." என்று சொன்னேன்.

அந்த சமயத்தில், என் சகோதரன் ஒரு டீ கடை வைத்திருந்தான். அவன் அந்தக் கடையை, "நீ எடுத்து நடத்து." என்று சொல்லி, என்னிடத்தில் கொடுத்து விட்டான். எனக்கு அந்தத் தொழிலைப் பற்றி எதுவுமே தெரியாது. வீட்டில் கூட எனக்கு டீ போட்டுப் பழக்கம் கிடையாது. இந்த நிலையில், கர்த்தர் மீது விசுவாசம் வைத்து, "அந்தத் தொழிலை நடத்த, கர்த்தர் எனக்கு ஞானம் கொடுப்பார்." என்று எண்ணி, அந்தத் தொழிலை செய்ய ஆரம்பித்தேன்.

அப்பொழுது, "**நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்;**" (ஆதி. 12:2) என்கிற வேத வசனத்தை கர்த்தர் எனக்கு ஒரு வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். எங்கள் குடும்பத்தினர் கூட, "உனக்கு டீ கடை எல்லாம் சரிப்பட்டு வராது. அது வேண்டாம்." என்று சொன்னார்கள். ஆனால், நான் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்தேன். எவ்வளவோ தடைகள் மத்தியில் அந்த டீ கடையை திறப்பதற்கு கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார். ஆரம்பத்தில், கொஞ்சம் சுமாராகத்தான் தொழில் நடந்தது. அதன் பிறகு, தினந்தோறும் அதிகாலையில் எழும்பி, கர்த்தர் எனக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி, விசுவாசத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தேன்.

அதன் பிறகுதான், கொஞ்சம் கொஞ்சமாக கர்த்தர் தொழிலை ஆசீர்வதித்தார். ஆரம்பத்தில் நாங்கள் ஒன்றிரண்டு வகையான டீதான் போட்டுக் கொண்டிருந்தோம். அந்த நாட்களில், எங்கள் கடையில் 'புகையிலை', 'பீடி', 'சிகரெட்' மற்றும் 'பான்பராக்' போன்ற போதைப் பொருட்களை எல்லாம் வைத்து விற்றுக் கொண்டிருந்தோம். ஒரு ஞாயிறு ஆராதனையில், "உன் மூலமாக என்னுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது." என்று ஆவியானவர் என்னோடு பேசினார். உடனே நான் மிகுந்த கண்ணீரோடு அழுது, என்னை ஒப்புக் கொடுத்து ஜெபித்தேன். அதற்குப் பிறகு, போதைப் பொருட்களை விற்பதை நிறுத்தி விட்டேன்.

அந்த சமயத்தில், "அதிகமாக ஜனங்கள் கூடும் இடங்களில் புகையிலைப் பொருட்களை விற்கக் கூடாது." என்று அரசாங்கமும் அறிவிப்புக் கொடுத்திருந்தது.

கர்த்தர் எனக்கு, 2007ம் வருடம் வாக்குக் கொடுத்தார். ஆனால் அது, 2011ம் வருடம்தான் நிறைவேறியது. அப்பொழுது, "கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியத்தை நாம் செய்ததினால்தான் வாக்குத்தத்தம் நிறைவேற கால தாமதமானது." என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அந்தப் பாவ காரியத்தை நான் எடுத்துப் போட்ட பிறகுதான், எங்கள் தொழில் ஆசீர்வாதமாக மாறியது.

நாங்கள் பல்வேறு வகையான டீ போட்டு விற்பனை செய்தோம். இந்நிலையில், "பொதுவாக எல்லோரும் டீ, காபிதானே கொடுக்கிறார்கள்! ஆனால், நாம் மற்றவர்களைப் போல இருக்கக் கூடாது. வித்தியாசமாக, நல்ல தரமானதாகக் கொடுக்க வேண்டும். அதன் மூலமாக ஜனங்கள் சந்தோஷப்படுவது மாத்திரமல்ல, கர்த்தருடைய நாமமும் மகிமைப்பட வேண்டும்." என்கிற ஒரு எண்ணம் எனக்குள் உண்டானது.

முதலாவது, 18 வகையான டீ போடுவதற்கு கர்த்தர் கிருபை செய்தார்! இப்பொழுது 100க்கும் அதிகமான டீ போட கர்த்தர் கிருபை செய்திருக்கிறார்!

நான் பல்வேறு வகையான டீ போட்டு விற்பதால், "இது அதிசயமாக இருக்கிறதே! பெங்களூரில் கூட எங்கேயும் கிடைக்காத டீ, இந்த சாரோன் டீ கடையில் கிடைக்கும்!" என்று சொல்லும்படியாக, கர்த்தர் எங்கள் கடையின் பெயரைப் பெருமைப்படுத்தினார்.

மட்டுமல்ல, ஊடகச் செய்தியாளர்கள் மற்றும் அதிகாரிகள், பெங்களூரிலுள்ள அத்தனை டீ கடைகளையும் சர்வே எடுத்து 5 கடைகளை தேர்வு செய்தார்கள். அதில், எங்களுடைய சாரோன் டீ கடையும் ஒன்று. கர்த்தர், தான் வாக்குக் கொடுத்தபடியே, என் பெயரை பெருமைப்படுத்தினார்.

ஆரம்பத்தில் நான் மட்டும்தான் டீ போட்டு கொடுத்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய டீ கடை எல்லா தொலைக்காட்சிகளின் மூலமாகவும் பிரபலமானபோது, அனேக ஜனங்கள் எங்கள் கடைக்கு வர ஆரம்பித்து விட்டார்கள். அந்நேரம் பார்த்து, கடையில் இருந்த வேலைக்காரர்கள் எல்லோரும் வேலையை விட்டுப் போய் விட்டார்கள். அந்த சமயத்தில், நானும், என் மனைவியும், என் சகோதரனுமாக சேர்ந்துதான் அந்தக் கடையை நடத்திக் கொண்டிருந்தோம்.

ஆனாலும், எங்கள் கடைக்கு வருகிற கூட்டத்தை எங்களால் சமாளிக்க முடியவில்லை. வேலைக்கு ஆட்களும் கிடைக்கவில்லை. இந்நிலையில், "இந்தத் தொழிலை விட்டு விட வேண்டியதுதான்." என்று நினைத்தோம். இக்கட்டான அந்த சூழ்நிலையில், ஒரு ஜனவரி மாதம் பொங்கல் விடுமுறையில், நாலுமாவடியில் நடைபெற்ற திறப்பின் வாசல் உபவாச முகாமில் கலந்து கொண்டு ஜெபித்தோம்.

அப்பொழுது நமது சகோதரர் அவர்கள் மூலமாக, "கர்த்தர் உங்கள் முன்னே போவார். நீங்கள் தைரியமாகப் போய் கடையை நடத்துங்கள்." என்று சொல்லி, ஆவியானவர் எங்களை தைரியப்படுத்தி அனுப்பினார். நாங்கள் அந்த வார்த்தையை விசுவாசித்து, ஜெபித்தோம். அடுத்த நாளே 3 பேர் வேலைக்கு வர கர்த்தர் உதவி செய்தார்.

அவர்களை வைத்து கடையை நடத்த ஆரம்பித்தோம். இன்றைக்கு எங்கள் கடையில் 5 பேர் வேலை செய்கிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை, எந்தக் குறைவும் இல்லாமல், கர்த்தர் எங்கள் தொழிலை ஆசீர்வாதமாக நடத்திக் கொண்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பகுதி!

# புத்தியுள்ள ஸ்திரீ!



சிறப்புச் செய்தி:
சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.

கடந்த (2017) ஏப்ரல் மாத இதழில், "மதுரையைச் சேர்ந்த ஒரு ஆசிரியர், தினந்தோறும் மாலை நேரத்தில் அவர்களிடத்தில் படிக்கிற பிள்ளைகளுக்கு, இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்வார். ஒரு வருடத்திற்குள் ஆயிரத்திற்கும் அதிகமான பிள்ளைகளை அவர் கர்த்தருக்குள் கொண்டு வந்து விடுவார். சற்று யோசித்துப் பாருங்கள், 'ஆயிரம் பிள்ளைகள்...' என்று சொன்னால், அந்த ஆயிரம் பிள்ளைகளும் மேல் படிப்பிற்காக வேறு இடத்திற்குப் படிக்கப் போகும்போது, குறைந்தது, இன்னும் ஆயிரம் பேருக்கு சுவிசேஷம் சொல்வார்கள் அல்லவா?" என்று, கடைசியாக வாசித்து முடித்திருப்பீர்கள்.

தொடர்ந்து வாசியுங்கள்...

இப்படித்தான் சுவிசேஷம் பரவும். ஆகவே, சுவிசேஷம் அறிவிப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக, நாம் செயல்பட வேண்டும்.

ஒரு சமயம், 2 பெண் பிள்ளைகள் என்னைச் சந்திக்கும்படியாக கடந்து வந்தார்கள். அதில் ஒரு பிள்ளை +2 படிக்கிறவள். இன்னொரு பிள்ளை கல்லூரியில் படிக்கிறவள். கல்லூரியில் படிக்கிற அந்தப் பிள்ளை, சமீபத்தில்தான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தாள். நான் அவர்கள் இருவரையும் பார்த்து, "உங்களுக்கு என்ன காரியமாக ஜெபிக்க வேண்டும்?" என்று கேட்டேன்.

அப்பொழுது அந்தக் கல்லூரி மாணவி, "எனக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி இன்னும் சொல்லுங்கள். கர்த்தர் எனக்கு தரிசனம் கொடுத்தார். அந்த தரிசனத்தை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ளத்தான் வந்திருக்கிறேன். எனக்காக ஜெபம் பண்ணுங்கள்." என்று சொன்னாள்.

ஆனால், +2 படிக்கிற அந்தப் பிள்ளையோ, "எனக்கு நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி எல்லாம் ஒன்றும் சொல்ல வேண்டாம். எனக்கும், அவருக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. எனக்காக நீங்கள் ஜெபிக்கவும் வேண்டாம்." என்று சொன்னாள். ஆகவே நான் அவளிடத்தில் ஒன்றும் பேசாமல், என் உள்ளத்திற்குள் அமைதியாக ஜெபம் பண்ணிக் கொண்டே இருந்தேன்.

அப்பொழுது ஆவியானவர் என்னோடு இடைப்பட்டார். அவருடைய ஏவுதலின்படியே, நான் அவளைப் பார்த்து, "நீ பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, உனக்கு திடீர் திடீரென்று வயிற்று வலி வருகிறது அல்லவா? அந்த நேரத்தில், நீ மயங்கி கீழே விழுந்து விடுகிறாய்! உன்னால் சரியாக பாடங்களைப் படிக்க முடியவில்லை! இப்பொழுது நீ பரீட்சையில் தோல்வி அடைந்து இருக்கிறாய் அல்லவா?" என்று அவளிடத்தில் கேட்டேன்.

**எல்லோருக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்!**

அவள் மிகவும் ஆச்சரியப்பட்டு, "ஆம், நீங்கள் சொன்னது எல்லாம் உண்மைதான்! எனக்கு திடீர் திடீரென்று வயிற்று வலி வரும். அப்பொழுது அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து விடுவேன். 'எப்பொழுது எனக்கு வயிற்று வலி வரும்?' என்று எனக்கே தெரியாது.

மட்டுமல்ல, பாடப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலே கண்களைக் கட்டிக் கொண்டே வரும். என்னால் படிக்கவே முடியாது. பரீட்சை நேரத்தில் என்னால் சரியாக எழுதவே முடியாது. இப்படியாக நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்." என்று சொன்னாள்.

சில நிமிடங்கள் அமைதியாக இருந்த அவள், தன்னோடு வந்த அந்தக் கல்லூரி மாணவியினிடத்தில், "இந்த அக்கா என்னுடைய காரியத்தை அப்படியே சொல்கிறார்களே! என்னுடைய சரீர நிலைமையைப் பற்றி எதுவுமே இவர்களுக்குத் தெரியாது! எப்படி இவர்களால் சரியாக சொல்ல முடிகிறது?" என்று மிகவும் ஆச்சரியத்தோடு கேட்டாள்.

அதற்கு அவள், "அதுதான் அவர்களுக்குள் இருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய வல்லமை! உன்னுடைய பிரச்சனைகளை எல்லாம் இயேசு கிறிஸ்துதான் இவர்களுக்கு வெளிப்படுத்திச் சொன்னார்." என்று சொன்னாள். அவள் மிகவும் ஆச்சரியப்பட்டவளாக, "எனக்கு ஒரு வேதப் புத்தகம் தாருங்கள்." என்று கேட்டாள். உடனே அவளுக்கு ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்கிக் கொடுத்து, சுவிசேஷத்தைச் சொல்லி, அவளுக்காக ஜெபித்து அனுப்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அன்பானவர்களே, சமயம் கிடைக்கும் போதெல்லாம், சுவிசேஷத்தை நாம் அறிவிக்க வேண்டும். எல்லோருக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லுங்கள். அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். அவர்களும் இயேசு கிறிஸ்துவின் அன்பை தங்கள் வாழ்க்கையில் ருசிக்க வேண்டும்.

நீங்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்யப் புறப்பட வேண்டும். நாம் கர்த்தருக்காக எழும்பும்போது, தேவ சமூகத்தில் ஜெபிக்கும்போது, நம்முடைய குடும்பம் முழுவதுமாக இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக வரும்! நாம் வசிக்கிற கிராமம், இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ளும்! நாம் வசிக்கிற பட்டணம், இயேசு கிறிஸ்துவுக்குள் வரும்! நம்முடைய தேசம், கர்த்தரை அறிந்து கொள்ளும்!

## கர்த்தர் விரும்பும் குடும்பம்!



குடும்பமானது மிக மிக முக்கியமானது. கர்த்தர் மனுக் குலத்தை உண்டாக்கியபோது, ஆணும், பெண்ணுமாகத்தான் உண்டாக்கினார். அவர்கள் மாம்சத்தில் மாம்சமும், எலும்பில் எலும்புமாக உண்டாக்கப் பட்டார்கள். மனிதனை உண்டாக்கிய கர்த்தர், "இது மிகவும் நல்லது." என்று கண்டார். **(மத்தேயு 19:4).**

**"...புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."** (ஆதி. 2:24; மத்தேயு 19:5) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

மட்டுமல்ல, அவர்களுக்குள் ஒரு குடும்ப உறவு இருக்கும்படியாக கர்த்தர் அவர்களை உருவாக்கினார். ஆக, குடும்பத்தை உண்டாக்கியவர் கர்த்தர். அதோடு கூட, குடும்ப வாழ்க்கைக்கான வழிமுறைகளையும் அவரே உண்டாக்கி இருக்கிறபடியினால், மனிதனுடைய குடும்ப வாழ்க்கையானது, மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. காரணம், கர்த்தர் குடும்பங்களை ஆசீர்வதிக்கிறவராக இருக்கிறார்.

கர்த்தர், ஆபிரகாமை குடும்பமாக வைத்து ஆசீர்வதித்தார்! ஈசாக்கை குடும்பமாக வைத்து ஆசீர்வதித்தார்! யாக்கோபை குடும்பமாக வைத்து ஆசீர்வதித்தார்! லோத்தை குடும்பமாக வைத்து ஆசீர்வதித்தார்! இப்படியாக, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட அனேகக் குடும்பங்களைப் பற்றி நாம் பரிசுத்த வேதாகமத்தில் பார்க்க முடியும். மனிதன் குடும்பமாகவும் வாழ்ந்து, கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே, அவருடைய விருப்பமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, மனிதன் குடும்பமாக இருந்து வாழ்கிற காரியத்தில், அவன் கடைப்பிடிக்க வேண்டிய அனேகக் கட்டளைகளையும் கர்த்தர் கொடுத்திருக்கிறார்.

**"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக."** யாத். 20:12.

**"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.**

**புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்.**

**பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது.**

**பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்."** (கொலோ. 3:18-21) என்று, ஒரு குடும்பத்திற்கு வேண்டிய கட்டளைகளையும், ஆலோசனைகளையும், தம்முடைய வார்த்தைகள் மூலமாக கர்த்தர் கொடுத்திருக்கிறார்.

அனேகக் குடும்பங்களில் வயதில் பெரியவர்கள் இருப்பார்கள். அவர்கள் மனம் கசந்து கொள்ளும்படியான காரியங்களை, நாம் ஒருபோதும் செய்யக் கூடாது. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கர்த்தரால் கொடுக்கப்பட்ட கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவைகளுக்குக் கீழ்படிந்து நடந்தால், அந்தக் குடும்பம் ஒரு மகிழ்ச்சியான, ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக இருக்கும்.

அதே சமயத்தில், இந்த நாட்களில் பெரும்பாலான குடும்பங்களுக்குள் விவாக ரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனேகக் குடும்பங்களுக்குள் கணவன்-மனைவிக்குள் பிரிவினை. விட்டுக் கொடுக்க மனமில்லாமல், "தனியாக வாழ்ந்து கொள்ளலாம்!" என்று நினைக்கிறார்கள். "ஏன் கணவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்? ஏன் மனைவியின் சொல்லை நாம் கேட்க வேண்டும்? ஆணும், பெண்ணும் சமம்." என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

அதிலும், "மிகவும் வேதனைக்குரிய காரியம் என்ன?" என்றால், இந்நாட்களில், கிறிஸ்தவக் குடும்பத்திற்குள்தான் அனேக விவாக ரத்து காணப்படுகிறது. நீதிமன்றங்களில், கிறிஸ்தவர்களுடைய விவாக ரத்து வழக்குகள்தான் ஏராளமாக நடந்து கொண்டிருக்கிறது!

கர்த்தருடைய வேத வசனங்களுக்கு நாம் கீழ்படிந்து வாழ்வோமானால், நம்முடைய குடும்பம் கிறிஸ்துவுக்குள் கட்டப்படும். நாம் இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வோம். அவர் நம்முடைய குடும்பங்களை ஆசீர்வதிப்பார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுமாவடி
திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!



கலங்காதீர்கள்! நீங்கள் வெட்கப்பட்டுப் போக கர்த்தர் விட மாட்டார். உங்களுக்கு அற்புதம் செய்வார்! நீங்கள் ஜெபித்தால் போதும், அற்புதம் நடக்கும்! உங்களோடு சேர்ந்து ஜெபிக்க, நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாம் சேர்ந்து ஜெபிக்கலாம்!

இதற்காகத்தான் திறப்பின் வாசல் ஜெபத்தை கர்த்தர் ஏற்படுத்தினார். திறப்பின் வாசல் ஜெப நாளில், நீங்களும் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்! நாங்கள் சுமார் 40,000க்கும் அதிகமானோர் சேர்ந்து உங்களுக்காக ஜெபிப்போம், இயேசு கிறிஸ்து அற்புதம் செய்வார்! கடந்த நாட்களில் ஜெபித்த ஜெபத்திற்கு, இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களைப் பாருங்கள்:

## 19 வருடங்களுக்குப் பிறகு குழந்தை!

எனக்குத் திருமணமாகி 19 வருடங்களாகியும், **குழந்தை பாக்கியம் இல்லை**. மிகுந்த மன வேதனையின் மத்தியில் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, ஒரு பொருத்தனையோடு ஜெபித்து விட்டுச் சென்றேன்.



கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, 19 வருடங்களுக்குப் பிறகு என் கர்ப்பத்தை ஆசீர்வதித்து, **ஒரு ஆண் குழந்தையை எனக்குக் கொடுத்து**, என் **துக்கத்தை மாற்றினார்**. - **சரோஜா, சுங்கான்கடை.**

## கண் பார்வை தெளிவானது!

நீரிழிவு நோயினால், என் இரண்டு கண்களிலும் பார்வை முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டு விட்டது. "ஆபரேஷன் பண்ணினாலும் உங்களுக்குப் பார்வை கிடைக்காது." என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்.



ஜெப வேளையில், கர்த்தருடைய வெளிச்சம் ஒரு ஒளியைப் போல என் கண்களில் பட்டதை உணர்ந்தேன். அந்நேரமே **தெளிவான பார்வை** வந்து விட்டது. - **கன்னி மரியாள், அருப்புக்கோட்டை.**

## நடக்கப் பண்ணினார்!

என் கால்களில் இருந்த **பெலவீனத்தினால்**, நடக்க முடியாமல், **4 வருடங்களாக ஊன்று கோல் உதவியோடுதான்** நடந்து கொண்டிருந்தேன். ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டது.



அந்த நேரத்திலிருந்து, **ஊன்றுகோல் உதவி இல்லாமல்** என்னால் **நன்றாக நடக்க முடிகிறது**. - **ஜெசிந்தா மேரி, சிவகங்கை மாவட்டம்.**

## 7 வருட வலி நீங்கியது!

என் **முதுகுத் தண்டுப்** பகுதியில் இருந்த **வலியினால்**, சுமார் **7 மாதங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன்**.



என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. ஜெப வேளையில், தேவ வல்லமை என் முதுகுப் பகுதியைத் தொட்டதை உணர்ந்தேன். அந்நேரமே, **பூரண சுகத்தைப்** பெற்றுக் கொண்டேன். - **ஜோஸ்.**

## வேதனைகளை மாற்றினார்!

என் இடது **காதுக்குள்**, ஊசியை வைத்துக் குத்துவது போன்ற **வலியினாலும்**, **உச்சந் தலைக்குள்** அடிக்கடி உண்டாகிற வலியினாலும், **5 மாதங்களாக** மிகவும் வேதனைப்பட்டேன்.



மருந்துகளால் சுகம் கிடைக்கவில்லை. ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டு, எல்லா பிரச்சனைகளையும் மாற்றி, நல்ல **சுகத்தைக் கொடுத்தது**. - பியூலா, மானூர்.

## அசுத்த ஆவி வெளியேறி, சுகம்!

**அசுத்த ஆவியின் கிரியையினால்**, என் **முதுகில்** பயங்கரமான **வலி** இருந்தது. திடீர் திடீரென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரமான வலி உண்டாகும். வலி வந்தால்,



என்னால் தாங்கவே முடியாது. ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னை முழுவதுமாக ஆட்கொண்டபோது, எனக்குள் இருந்த அந்த அசுத்த ஆவி என்னை விட்டு வெளியேறியது. அந்த வினாடியே வலியும் நீங்கி விட்டது. - ரோஸ்லின், தோட்டாக்குடி.

## அற்புத சுகம் கிடைத்தது!

என் இரண்டு கண்களிலும் திடீரென்று



பார்வை தெளிவில்லாமல் ஆனதினால் வேலைக்குப் போக முடியாமலும், என் முதுகுப் பகுதியில் உண்டாயிருந்த கடுமையான ஒரு வலியினால், எந்தவொரு வேலையையும் என்னால் செய்ய முடியாமலும் மிகவும் கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டு, நல்ல சுகத்தைக் கொடுத்தது. - ராணி, திருப்பூர்.

## 13 வருட கட்டி மறைந்தது!

என் இடது முதுகுப் பகுதியில் பெரிய அளவில் இருந்த ஒரு கட்டியினால், சுமார் 13



வருடங்களாக வேதனைப்பட்டேன். அந்தக் கட்டியின் நிமித்தமாக எல்லோரும் என்னை பயமுறுத்தினார்கள். மட்டுமல்ல, என் வலது கையையும் தூக்க முடியாமல் ஒரு வருடமாக கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில் சகோதரர் அவர்கள், கட்டிகள் மறையும்படியாக ஜெபத்தை ஏறெடுத்தபோது, நானும் ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, கட்டியை மறையச் செய்து, பூரண சுகத்தைக் கொடுத்தார். - காவேரி, ஈரோடு.

## பிரச்சனைகள் மாறின!



என் கண்களுக்குள் வளர்ந்திருந்த தேவையற்ற சதையினால், கண் பார்வை தெளிவில்லாமல், 7 வருடங்களாக கஷ்டப்பட்டேன்.

மாலை வேளையில் கண்களிலிருந்து தண்ணீர் வடிய ஆரம்பித்து விடும். ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டபோது, எல்லாப் பிரச்சனைகளும் மாறி, கண்களிலும் தெளிவான பார்வை உண்டானது. - கிரேஸி, பல்லடம்.

## கட்டியை மறையப் பண்ணினார்!



என்னுடைய கர்ப்பப் பையில் 2 வருடங்களாக இருந்த ஒரு கட்டியினால், மிகவும் வேதனைப்பட்டேன்.

மிகுந்த கவலையோடு, தொடர்ந்து நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, மிகுந்த கண்ணீரோடு ஜெபித்து வந்தேன்.

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அந்தக் கட்டியை மிக அற்புதமாக மறையச் செய்தார். - புஷ்பா, ஏரல்.

இவர்களுக்கு அற்புதம் செய்த
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து,
உங்களுக்கும் அற்புதம் செய்வார்!
உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும்,
அந்தக் காரியத்தை கடிதத்தில்
எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான
முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.
நீங்களும் இந்த நாளில் உபவாசித்து,
விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.
இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து,
உங்கள் துக்கத்தை மாற்றுவார்.
திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று,
காலை 9:00 - மாலை 3:00 மணிவரை
ஜெபிப்போம். நீங்களும் இதே நேரத்தில்
எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.
ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும்
பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.
- உங்கள் சகோதரன்.

நாலுமாவடி
திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்: 2017**

# மே 27

(கடைசி சனிக்கிழமை)

Address: Standing in the Gap Prayer,
Nalumavadi-628 211, Thoothukudi Dist., India.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Q&A கேள்வி-பதில்!

**கேள்வி:**

நான் 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். சுமார் 8 மாதங்களுக்கு முன், 28 வயதுள்ள ஒரு கிறிஸ்தவ வாலிபன் என்னைக் காதலிப்பதாகவும், திருமணம் செய்ய விரும்புவதாகவும் என்னிடத்தில் கூறினான். அவனது வார்த்தையைக் கேட்டதுமுதல், நான் குழப்பம் அடைந்திருக்கிறேன். அவன் என் மீது மிகவும் அன்பு செலுத்துகிறான். நானும் அவனை மிகவும் விரும்புகிறேன்.

எனக்கு இதுதான் முதல் அனுபவம். அவன் என்னை விட மிக அதிக வயதுடையவன் என்று எண்ணி, அவனது உறவைக் குறித்து நான் பயப்படுகிறேன். ஆனாலும், அவனைக் குறித்து அதிகமாக நினைத்து நினைத்து, பகல் கனவு காண்கிறவளாக இருக்கிறேன்.

இதன் நிமித்தமாக, எனது நேரமெல்லாம் வீணாகிறது. எனது படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் தடுமாறுகிறேன். வீட்டில் உள்ளவர்களிடத்திலும், என் சினேகிதிகளிடத்திலும் சரியான நட்பு பாராட்ட முடியாமல் தவிக்கிறேன். எனது பெற்றோரிடம், சரியான முறையில் என்னால் பழக இயலாமல் இருப்பதினால், அவர்கள் என்னைக் குறித்து மிகவும் கவலைப்படுகின்றனர். எனது குழப்பம் தீர்ந்து, நான் சந்தோஷமாக வாழ, எனக்கு ஆலோசனை தாருங்கள்.

**பதில்:**

அருமைத் தங்கையே, உன் கடிதத்தின் மூலமாக, அந்த வாலிபனிடத்தில் கொண்டிருக்கிற உணர்வு பூர்வமான உன் புதிய உறவினால் நீ நிறைந்திருக்கிறாய் என்பதை அறிகிறேன். இந்தக் காதல் உறவு, முதன்முதலாக உனக்கு ஏற்பட்டிருப்பதால், நீ மகிழ்ச்சியாக இருந்தாலும், அவரை உன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வதில் மிகவும் குழப்பமடைந்து போய் இருக்கிறாய். உனக்குள் உணர்வு பூர்வமாக அதிக மகிழ்ச்சி இருந்தாலும், சில நடைமுறை உண்மைகள் அவ்வப்போது உன்னை கவலையடையச் செய்துள்ளது.

உன் குழப்பத்திலிருந்து நீ தெளிவடைய, நான் உனக்குத் தருகிற சில ஆலோசனைகளைப் பற்றி சற்று சிந்தித்துப் பார். முதலாவதாக, நீ தற்சமயம் உன் சரீர வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களினால், வாலிப வயதை எட்டி இருக்கிறாய். பொதுவாக இவ்வித மாற்றங்கள், 13 முதல், 19 வயதுக்குள்ளாக ஏற்படுகிறது. இந்தக் காலக் கட்டத்தில்தான், உடற்கூறு வளர்ச்சியிலும், மனதளவிலான உணர்வுகளிலும், உறவு பாராட்ட விரும்புவதிலும், தீர்மானங்கள் எடுப்பதிலும், சமுதாயக் கண்ணோக்கத்திலும் பல மாற்றங்கள் ஏற்படுகிறது.

இத்தகைய சரீரப் பிரகாரமான வாலிப வளர்ச்சி மாற்றம், ஒரு புதிய கண்டுபிடிப்பாகவும், குழப்பம் நிறைந்ததாகவும் கூட நமக்குக் காணப்படும். இந்த மாற்றம், நம்மை சுய சார்புடையவர்களாக, "நாமே நம்முடைய வாழ்க்கையை தீர்மானித்துக் கொள்ளலாம்." என்கிற நிலைமைக்கு நம்மைக் கொண்டு போகும். அதன் மூலமாக, நாம் சிறந்த பண்பாளர்களாகவும், படிப்பாளிகளாகவும் மாறலாம்.

அல்லது, தவறான கெட்ட பழக்க வழக்கங்களில், குறிப்பாக பாலுணர்வுக் காரியங்களில் அதற்குரிய வயதிற்கு முன்பே ஈடுபடுதல், சமுதாய சீரழிவுக்குக் காரணமான மது பானம், போதை மருந்துப் பழக்கத்திற்கு அடிமையாதல் மற்றும் வெளித் தோற்றத்திற்கும், கவர்ச்சியான உடை அலங்காரத்திற்கும், அதன் மூலமாக 'காதல்' என்னும் வலையில் விழுந்து விடுவதற்கும் நம்மைத் தூண்டி விடலாம்.

சரீர வளர்ச்சி மற்றும் உடற்கூறு மாற்றங்கள் உண்மை எனினும், மேற்கூறிய காரியங்களைத் தெரிந்தெடுப்பதற்கான அறிவு வளர்ச்சி மற்றும் மன நிலை முதிர்ச்சி உடனே ஏற்பட்டு விடுவதில்லை. ஆகவே, பொதுவாக இந்த வாலிப வயதின் ஆரம்ப விளிம்பிலிருந்து நீ எடுக்கும் வாழ்க்கைத் தீர்மானங்கள் உணர்வு பூர்வமானதாகவே இருக்கும். "இது சரியா? அல்லது தவறா?" என, காரணங்களைச் சிந்தித்து தீர்மானிப்பதாக இருக்காது.

அத்துடன் இந்தப் புதிய காதல் உறவினால், உன் பள்ளிப் படிப்பும், ஆரோக்கியமாய் இருக்க வேண்டிய உன் குடும்ப உறவும், உன் நண்பர்களோடு உனக்கிருந்த நட்பும் குறைந்து, பாதிப்படைந்துள்ளதையும் நான் காண்கிறேன். நீ குறிப்பிட்டுள்ள அந்த வாலிபனைக் குறித்து அதிகம் சிந்திப்பதும், தேவையில்லாத பகல் கனவும், நடைமுறை வாழ்வில் சாத்தியமற்ற மாயையான உறவைப் பற்றி இப்பொழுது நீ நினைப்பதும், உன்னை மிகவும் ஆபத்தான சூழ்நிலைக்குள் தள்ளி விட்டு விடும். இப்பொழுது நீ படிப்பில் கவனம் குறைந்து, ஆரோக்கியமான உன் குடும்ப மற்றும் நண்பர்களோடு கூடிய உறவிலும் பாதிப்படைந்து இருக்கிறாய் என்பதே உண்மை!

பெரிய ஞானியான '**சாலொமோன்**' என்னும் அரசன், மனிதர்களாகிய நமது வாழ்வில் இருக்க வேண்டிய அடிப்படையான வாழ்க்கைத் தத்துவத்தை, அவர் எழுதிய '**பிரசங்கி**' என்னும் நூலில், **"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயமுண்டு."** (பிரசங்கி 3:1) என்கிறார்.

"இதன் மூலமாக நாம் அறிந்து கொள்கிற உண்மை என்ன?" என்றால், நமது வாழ்க்கையில் நடைபெற இருக்கிற, அனுமதிக்கப்படுகிற அனைத்துக் காரியங்களுக்கும் ஏற்ற சரீர வளர்ச்சி மட்டும்லல, சரியான மன வளர்ச்சியையும், அறிவின் முதிர்ச்சியையும் அதினதின் காலத்தில் கர்த்தர் தருகிறார் என்பதே!

"காதலைப் பற்றி என்ன?" என நீ யோசிக்கலாம்! பள்ளிப் படிப்பில் இருக்கும்போது அல்ல, திருமண வாழ்விற்கு ஏற்ற வயதும், முதிர்ச்சியும் இருக்கும் போதுதான், அதைப் பற்றி சிந்திக்க வேண்டும். பள்ளி 'மாணவப் பருவம்' என்பது, சிறந்த படிப்பிற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால வாழ்விற்குத் தேவையான தொழில் சார்ந்த திறமைக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும் தான்! ஆகவே, அதற்குத்தான் நீ உன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.

காதலில் நீ கவனம் செலுத்தினால், மேற்படியானவைகளில் தோல்வி அடைந்து விடுவாய். மேலும் நீ விரும்பும் வாலிபன், தன் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுத்து, குடும்பம் நடத்தக் கூடிய வயதை எட்டி இருக்கிறார். ஆனால், நீயோ 16 வயதுடைய பள்ளி மாணவி. வயது வித்தியாசம் 12 ஆண்டுகள்! இத்தகைய வயது வித்தியாசம் ஆரோக்கியமற்றது. இதை மீறுவது, பல்வேறு பாதிப்புகளைத்தான் உனக்கு ஏற்படுத்தும்.

ஆகவே, இப்பொழுது நீ ஈடுபட்டுள்ள இந்தப் புதிய காதல் உறவை உடனடியாக விட்டு விடுவது உனக்கு நல்லது. அதற்கு மாறாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் கூடிய ஒரு புதிய உறவை ஆரம்பிக்க, உன்னை அவருக்கு ஒப்புக் கொடுத்து விடு.

ஞானியான சாலொமோன் அரசன், வாலிபர்களுக்குக் கூறும் வார்த்தை என்னவென்றால், **"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை (கர்த்தரை) நினை;"** (பிரசங்கி 12:1) என்பதே. இந்த ஆலோசனை சற்றுக் கடினமாகத் தோன்றலாம். ஆனால், கர்த்தருடைய ஆவியானவரின் துணையோடு கூட, அதை நீ மிக எளிதாகச் செய்யலாம்! தீர்மானி!

**நீ எடுக்கும் தீர்மானத்தில் உறுதியாய் இருக்க, கீழ்காணும் ஆலோசனைகளை முயற்சித்துப் பார்!**

### 1. 'இல்லை!' என்பதே பதில்!

"கடந்த 8 மாதங்களாக நான் கொண்டிருக்கிற இந்தப் புதிய உறவிற்கு, எப்படி 'இல்லை' என்று சொல்வது?" என நீ யோசிக்கலாம். கர்த்தருடைய தெளிவான ஆலோசனைக்கு, நீ 'ஆம்.' என்று சொல்லி, இப்பொழுது தேவையில்லாத இந்த ஆரோக்கியமற்ற உறவிற்கு, 'இல்லை' என்று சொல்வதே சரி. என நம்பு. தயங்காமல் சொல். இதில் நீ உறுதியாய் நின்று, தெளிவாய் சொல்லி விடுவதுதான், உன் வெற்றியின் ஆரம்பம். அந்த வாலிபனிடமிருந்து நீ பெற்ற எல்லா வெகுமதிகளையும், பொருட்களையும், கடிதங்களையும் உடனே அழித்து விடு.

### 2. உன் குடும்பத்தினரை நம்பு!

இந்த உறவினால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் எப்பொழுது எல்லாம் உன்னைக் கலங்கப் பண்ணுகிறதோ, அப்பொழுதெல்லாம் உன் பெற்றோர் மீது நம்பிக்கை வைத்து, அவர்களுடைய உதவியை நாடு. அந்த வாலிபனிடமிருந்து ஏதேனும் உனக்கு நெருக்கடி வந்தால், உடனே உன் பெற்றோரிடம் தெரிவிப்பது, உனக்குத் தேவையான உதவி கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

### 3. எதிலும், எப்பொழுதும் சுறுசுறுப்பாய் ஈடுபடு!

வீணான சிந்தனையில் மூழ்கி, பகல் கனவு கண்டு, நேரத்தை வீணாகக் கழிப்பதற்கு ஏதுவில்லாமல், உனது அன்றாடப் படிப்புடன், பயனுள்ள ஏதாவது காரியங்களைக் கற்றுக் கொள்வதற்கும், செய்வதற்கும் உனது முழு நேரத்தையும் பயன்படுத்து. அல்லது, புதிய பாடங்கள் மற்றும் புதிய மொழியைக் கற்றுக் கொள்ளும் வகுப்பில் சேர்வது, புதிய விளையாட்டுகளில் ஈடுபடுவது, நீச்சல் கற்றுக் கொள்வது போன்ற காரியங்கள் உன் எதிர்கால வாழ்விற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### 4. ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக் கொள்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீ ஏற்றுக் கொள்வதுடன், அவர் அருளும் தூய ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்வதின் மூலமாக, உன் மனதின் சோதனைகளை மேற்கொள்ளும் பெலனைப் பெற்றுக் கொள்வாய். அவரே உன்னை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார். **(யோவான் 16:13).** அவரே உன்னை நீதியின் பாதைகளின் வழியாக நடக்கச் செய்வார். **(சங். 23:3).** ஒவ்வொரு நாளும் ஜெபி. கிரமமாக பரிசுத்த வேதாகமத்தை வாசித்து தியானி. **(சங். 1).**

### 5. ஆரோக்கியமான தொடர்புகளில் உன்னை ஈடுபடுத்திக் கொள்!

ஆரோக்கியமான தொடர்புகள் எப்பொழுதும் உன்னை சூழ்ந்திருக்கும்படியாகப் பார்த்துக் கொள். கவலையை உண்டாக்கும் தனிமையைத் தவிர்த்து, நல்ல சினேகிதிகளோடு ஐக்கியம் வைத்து, உன் வாழ்க்கையைக் கட்டி எழுப்பு. அவ்வப்போது புதிய இடங்களுக்குச் சென்று வா. சமுதாய சேவை செய்வது, ஆலயத்தில் வாலிபர் ஐக்கியத்தில் ஈடுபடுவது, ஓய்வு நாள் பள்ளி மற்றும் ஆரோக்கியமான குடும்ப உறவுகளில் நிலைத்திருக்கப் பிரயாசப்படு.

### 6. உன் எதிர்கால லட்சியத்தைக் கூர்மைப்படுத்து!

நீ இப்பொழுது படித்துக் கொண்டிருக்கிற பள்ளிப் படிப்பின் சிறப்பான தேர்வுதான், உன் உயர் கல்வி மற்றும் தொழில் கல்விக்கான சரியான அஸ்திபாரத்தை ஏற்படுத்தித் தரும். உனது எதிர்காலக் கனவை நனவாக்க, இப்பள்ளிப் பருவத்திலேயே எவ்வளவு அதிகமாக அதற்கென உழைக்க முடியுமோ, அவ்வளவாக உணர்வு பூர்வமாகவும், உற்சாகமாகவும் முயற்சி செய். உன் வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல படிப்பையும், அதற்கேற்ற ஒரு நல்ல வேலையையும் பெறுவதே உன் லட்சியமாக இருக்கட்டும்!

ஆம். இப்பொழுது நீ கடந்து சென்று கொண்டிருக்கிற இந்த அனுபவம், உன் வாழ்க்கையின் லட்சியத்திலிருந்து உன்னை திசை திருப்புகிற நிகழ்வுதான் என்பதை அறிந்து கொள். இப்பொழுதே விழித் தெழு! ஞானமாய் வாழக் கற்றுக் கொள்! தூசியை உதறி விட்டு எழுந்திரு! உன் வாழ்க்கையின் லட்சியத்தை அடைய துரிதமாய் செயல்படு! வெற்றி உனதே!

ஆம். உன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய உனக்கு பெலன் உண்டு! **(பிலி. 4:13).**

– Dr. கிறிஸ்டினா அகஸ்டின், Ph.D., சென்னை.
*Address: Jesus Redeems, (Question-Answer), Nalumavadi-628 211, Thoothukudi.*
*Ph:* **04639-22 00 22** *Email: prayer@jesusredeems.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு-திறப்பின் வாசல் ஜெபத்தில்

# பலன் தந்த இயேசு!



இலங்கை தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், நாட்டின் பாதுகாப்பு மற்றும் திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும் நாம் நடத்தி வரும் திறப்பின் வாசல் ஜெபத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு பாரத்தோடு ஜெபித்து வருகின்றனர். ஏப்ரல் மாதம் 1ம் தேதி மருதானை இம்மானுவேல் ஆலய மண்டபத்தில் வைத்து நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெபத்தில் 15 போதகர்கள் உட்பட சுமார் 225 பேர் கலந்து கொண்டு இலங்கை தேசத்தின் சுபிட்சத்திற்காக ஜெபித்தனர்.

இயேசு நம்மோடு சபையின் போதகர் Pr. **அருண்** அவர்கள் பாடல், ஆராதனை, தேசத்திற்காக மற்றும் திருச்சபைகளுக்கான ஜெபங்களை ஏறெடுத்தார்கள். Fr. **பேட்ரிக் லாரன்ஸ்** அவர்களின் சிறப்புப் பாடலைத் தொடர்ந்து Dr. R. **அன்புராஜன்** அவர்கள் **"பலங்கொண்டு திடமனதாயிரு"** என்ற தலைப்பில் கொடுத்த செய்தி வந்திருந்த அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தது. கர்த்தருடைய நாமம் வெகுவாய் மகிமைப்பட்டது.


Dr. R. அன்புராஜன்


Pr. அருள்


Fr. பேட்ரிக் லாரன்ஸ்


கலந்து கொண்ட போதகர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்த்தர் செய்த அற்புதங்களில் சில...

### ஜெபத்தை கேட்டார்!



திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொள்ளத் தொடங்கியதிலிருந்து தேவன் எனக்கு அனேக நன்மைகளை செய்திருக்கிறார். கடந்த திறப்பின் வாசல் ஜெபத்தில் எனது பேரன் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியிருந்த வேளை அந்தப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தை இங்கு கொண்டு வந்து அதன் மேல் கை வைத்து ஜெபம் செய்தேன். 9A பெற்று திறமையாக சித்தியடைய தேவன் கிருபை செய்தார்.
**– வினி பீரீடா**, மன்னார்.

### தடைகளை மாற்றி, ஆசீர்வதித்தார்!



நான் வசிக்கும் இடத்திலுள்ள அனேக திருமணமான பெண் பிள்ளைகளுக்கு குழந்தைப் பாக்கியத்திற்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். அனைத்துப் பிள்ளைகளுக்கும் தற்பொழுது குழந்தைப்பாக்கியம் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, எனது மகளுக்கும் குழந்தைப்பாக்கியத்தை பெற்றுக்கொள்வதற்குரிய தடைகளை விலக்கி குழந்தைப்பாக்கியத்தை அருளி தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்.
**– சகாயநாயகி**, யாழ்ப்பாணம்.

### பூரண சுகத்தைக் கொடுத்தார்!

கடந்த மாதம் எனது காலில் விஷக்கிருமி ஒன்று சென்றதால் கால் பாதத்தில் மிகவும் வீங்கி பெரிதாகக் காணப்பட்டது. மிகுந்த பயத்தோடும் கலக்கத்தோடும் வத்தளை கெத்சமனே ஜெப மையத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்ட பிற்பாடு அற்புதவிதமாக பூரண சுகத்தைப் பெற்றுக் கொண்டேன். **– சகோ. கலா**, கல்கிஸ்ஸ.




கொழும்பில் இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: **2017 ஜூன் 03** (சனிக்கிழமை)
நேரம்: **காலை 9:00 - மதியம் 2:00.**

இடம்: காலி முக கிறிஸ்து நாதர் ஆலய மண்டபம், *(Galle Face Christ Church Hall), Colombo - 03, (Near The Ramada Hotel)*

தேவ செய்தியும், ஜெபமும்:
**'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்**

தேசத்திற்காக ஜெபிக்கவும், புதிய ஆண்டின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*
*Ph: 011-2930 152.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்கேணியில் விடுதலைப் பெருவிழா!

நாள்: 2017 ஜுன் 3, 4.
(சனி, ஞாயிறு)

இடம்: Berea Prayer House,
Mankerny, Vaaharai.

நேரம்: மாலை 6:00 -
இரவு 9:00.

தேவ செய்தியாளர்கள்: சகோ. மோகன் சி. லாசரஸ், சகோ. ஜாண் பாலக்குமார்.

தொடர்புக்கு: 077 84 87 666.

### இலங்கை-மட்டக்களப்பில்

## திறப்பின் வாசல் ஜெப முகாம்! 2017

(3 நாட்கள் உபவாச ஜெபம்)

நாள் & நேரம்: **2017 ஜுன் 1, 2** தேதிகளில்,
(காலை **9:00** - மாலை **5:00**).
**ஜுன் 3**ம் தேதி, (காலை **9:00** - மதியம் **2:00**).

இடம்: **நற்செய்தி மைதானம்,**
**இல. 27, விமான நிலைய வீதி,**
**ஊரணி, மட்டக்களப்பு.**

தேவ செய்தியாளர்கள்:

**சகோ. மோகன் சி. லாசரஸ், சகோ. ஜாண் பாலக்குமார்.**

('நம்பிக்கையின் வாசல்' ஊழியங்கள்)

திருச்சபைகளில் எழுப்புதல் உண்டாக, எல்லா ஜனத்துக்கும் இரட்சிப்பு உண்டாக, சாத்தானின் வல்லமைக்கு சவால் விட, இலங்கை தேசத்தின் எழுப்புதலுக்காக,

**திறப்பில் நின்று ஜெபிக்க வாருங்கள்!**

தொடர்புக்கு: 077 71 48276,
077 98 13 245, 065 22 22 800, 076 69 10 172.

### இலங்கை-மன்னாரில்

## விடுதலைப் பெருவிழா!

நாள்: **2017 ஜுன் 9,10,11.**
(வெள்ளி, சனி, ஞாயிறு).
நேரம்: மாலை **5:00 - இரவு 9:00.**

இடம்: **மன்னார்-பொது**
**விளையாட்டு அரங்கம்.**

தேவ செய்தியாளர்கள்: **சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. ஜாண் பாலக்குமார்.**

பாவ, சாப, வியாதி மற்றும் பிசாசின் கட்டுகளிலிருந்து
**விடுதலையைப் பெற்றுக் கொள்ள வாருங்கள்!**

தொடர்புக்கு: 077 9178 228, 076 69 90 326.

குறிப்பு: கூட்டம் முடிந்து திரும்பிச் செல்ல, பஸ் வசதி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெத்செமனே ஜெப மையம்
GETHSEMANE PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

# வத்தளையில்

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

**பெண்கள் ஜெபம்!**
(வியாழக்கிழமைதோறும்)
10:00 A.M. - 1:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
10:00 A.M. - 1:00 P.M.

**குடும்ப ஆசீர்வாத கூடுகை!**
(ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று)
10:00 A.M. - 1:00 P.M.

**மாணவர்கள் கூடுகை!**
(2வது, 3வது சனிக்கிழமைதோறும்)
4:00 P.M. - 5:00 P.M.



சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

உங்கள் அவசர **ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை - பொலனருவயில் **திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!**

நாள்: **2017 ஜூன் 7**
(புதன்)
நேரம்: காலை 9:00 - மதியம் 3:00.

இடம்: **Minneriya Methodist Church.**

தேவ செய்தி: **சகோ. மோகன் சி. லாசரஸ்.**

**திறப்பில் நின்று ஜெபிக்க வாருங்கள்!**

தொடர்புக்கு: (077) 553 0068.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



**ஏஞ்சல் டி.வியில்** தினமும் காலை 7:30 - 8:00, இரவு 11:30-12:00.

**செவ்வாய்கிழமை தோறும் காலை 10:00 - 10:30.**

**சனிக்கிழமை தோறும் மதியம் 2:30 - 3:00.**

**சுவர்க டி.வியில்** ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல... ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

LBN The Cable TV Network

**Dialog TVயில்** (God Channel) ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின்**

தேவ செய்திகளைக் கேட்டு,

*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA
Registered in the Department of Posts of Sri Lanka under QD/119/News/2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org